யாழ்ப்பாணத்தில் 600 ஏக்கர் காணியில்

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

தலைமைக்காரியாலயம் எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 352
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க கார்த்திகை 5 ஷஃபான் 18 செவ்வாய்க்கிழமை [21-11-67]

உருளைக்கிழங்கு உற்பத்தி

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாண மாவட்டத்தின் உருளைக்கிழங்கு உற்பத்தி இம்முறை அதிகமான பயனை அளித்துவருவதாக விவசாயப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இம்முறை உருளைக்கிழங்கு உற்பத்தியில் வடபகுதி விவசாயிகள் அதிகமான அக்கறை காட்டிவருவதாகவும் அடுத்த பெப்ரவரி மாதம் இவைகளிலிருந்து சுமார் 70,000 முத்தல் கிழங்கு பெறமுடியுமெனவும் விவசாய இலாகாவினர் எதிர்பார்க்கின்றனர்.

சுமார் 600 ஏக்கர் காணியில் இங்கு உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பகுதியில் கோண்டாவில், நிருநெல்வேலி ஆகிய இடங்களில் 30 வீதமும், ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி ஆகிய இடங்களில் 30 வீதமும், வடமராட்சி, வலிகாமம் வடக்குப் பகுதிகளில் எஞ்சிய 40வீதமும் உருளைக்கிழங்கு நாட்டப்பட்டுள்ளது

இதற்கான விதைகிழங்கை அரசாங்கமே விவசாயிகளுக்கு வழங்கியது. விதைக்கப்பட்ட முழுக் கிழங்கும் பழுதடையாமல்விட்டால் இலங்கைக்குத் தேவையான 10-ல் 4 பங்கு உருளைக்கிழங்கு இங்கு பெறமுடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ந.நி.

யாழ்ப்பாணத்தில்

திருப்திகரமான சேவைக்கு இன்னும் 40 பஸ்கள் தேவை

தினமும் 35 பஸ் வண்டிகள் பழுதடைகின்றன

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணப் பகுதியில், பஸ் போக்குவரத்துச் சேவையை திருப்திகரமான முறையில் செயல்படுத்துவதற்கு, மேலதிகமாக இன்னும் 40 பஸ்கள் தேவைப்படுவதாக இ. போ. ச. வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

தற்பொழுது யாழ்ப்பாணப் பிரிவில் மொத்தம் 226 பஸ்வண்டிகள் இருப்பதாகவும், இவற்றுள் தினமும் 189 பஸ்வண்டிகள் சேவையில் ஈடுபட்டு வருவதாகவும் அறியப்படுகிறது.

சேவையிலீடுபடும் பஸ்களில் தினமும், 30 முதல் 35 வண்டிகள் பழுதடைந்து விடுவதால், பஸ் சேவை பாதிக்கப்பட்டு வருவதுடன், பஸ் சேவைபற்றி பொதுமக்களிடையே அதிருப்தி அதிகரித்துவருகிறது.

இதுதவிர, யாழ்ப்பாணம் மத்தியடிப்போவில் உதிரிப்பாகங்கள், இல்லாத காரணத்தால் 20 பஸ்கள்சேவையிலீடுபடாமலிருக்கின்றனவாம்.

இலங்கையிலுள்ள பஸ் சேவையை திருப்திகரமான முறையில் நடாத்துவதற்கு மேலதிகமாக 1000 பஸ் வண்டிகள் இ. போ. ச. விற்குதேவைப்படுமென்றும் தற்பொழுது 3900 பஸ்கள் மாத்திரமே சேவையிலீடுபட்டுவருவதாகவும் தேசிய அமைச்சு மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா அத்தனகல தொகுதியில் இ. போ. ச. டிப்போவொன்றை திறந்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை நாணய மதிப்புக்குறையுமா?

மந்திரிசபை நீண்டநேரம் ஆராய்ந்தும் முடிவில்லை

கொழும்பு, திங்கள் பிரிட்டன் தனது ஸ்டர்லிங் நாணயத்தின் மதிப்பைக் குறைத்ததைத் தொடர்ந்து இலங்கையும் தனது நாணயத்தின் மதிப்பைக் குறைக்கவேண்டுமா வேண்டியதில்லையா என்பது பற்றி மந்திரிசபை நேற்றுக் காலையிருந்து நண்பகல்வரை ஆராய்ந்தும் எதுவித முடிவும் செய்யவில்லை. இது சம்பந்தமாக அமைச்சர்கள் தங்கள் ஆலோசனைகளைத் தெரிவிக்கும்படிகூறி, மந்திரிசபைக் கூட்டத்தை நேற்று இரவுக்கு ஒத்திவைத்தனர்.

நாணயத்தின் மதிப்பைக் குறைப்பது பற்றி மந்திரிசபையில் இரண்டுவிதமான கருத்துக்கள் நிலவுவதே ஓர் இறுதி முடிவு ஏற்பட முடியாதிருப்பதற்குக் காரணம் என்று தெரிகிறது.

5-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலம்கட்டாயம்

தாய்மொழியே போதனாமொழி

கொழும்பு, திங்கள் முன்னர் அரசாங்க மான்யம் பெற்றுப் பின்னர் தனியார் பாடசாலையாகமாறிய பாடசாலைகள், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எவ்வித கட்டணமும் வசூலிக்க அனுமதிக்கப்படமாட்டா.

இன்று கல்வி மந்திரி திரு ஐ. எம். ஆர். ஏ. இரிய கொல்லே பார்லிமெண்டில் சமர்ப்பித்த போதுதொழில் நுட்பக் கல்வி மசோதாவில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டணம் விதிக்கக் கூடாது என்ற இந்த விதிக்கும் ஏனைய குறிக்கப்பட்ட விதிகளுக்குமிணங்கஒழுகாத இத்தகைய பாடசாலை எதுவும் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு ஒரு வித்தியாதிபதி நிர்வாகத்துக்குட்பட்ட பாடசாலையாக்கப் படும்.

அத்துடன் கட்டணங்கள் விதிக்கக் கூடாது என்றவிதியுடன் இப்பாடசாலைகள் மற்றும் பல தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

மூதலாவதாக அவை மூடப்படக்கூடது. ஜூலை 21, 1960 ல் இருந்த வசதிகள் கல்வித்தரம் இவற்றில் குறைவு எதுவும் இருக்கக் கூடாது.

இரண்டாவதாக அப்பாடசாலைகளில் செய்யப்படவிருக்கும் சீர்திருத்தங்களுக்கு அவை கட்டுப்பட்டிருக்கவேண்டும்.

பகுதி வித்தியாதிபதியின் அங்கீகாரம்பெறுமல். ஜூலை 21,1960-ல் சேவையிலிருந்த எந்த ஆசிரியரையோ, வேறு ஊழியரையோ வேலையினின்றும்நிறுத்தக்கூடாது. பாடசாலைச் சொத்து எதுவும் எடுத்துக்கொள்ளக் கூடாது.

கட்டணம் விதிக்கும், விதிக்காத சகல தனியார் பாடசாலைகளும் மந்திரியின் உத்தரவுகளுக்குக் கட்டுப்படுவதுடன், மசோதாவின் தேவைகளுக்கேற்ப புனரமைக்கப்படும்.

மசோதா அமுலுக்குவரும் திகதியிலிருந்து எந்தவொரு பள்ளிக்கூடத்திலும், போதனாமொழி—தமிழ் அல்லது சிங்களம்—தாய்மொழியாகவே இருக்கும்.

ஆங்கிலம், 5-ம் பிரிவு தொடக்கம் எல்லாப்பள்ளிக் கூடங்களிலும் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்படும். சிங்களம் அல்லது தமிழ், எல்லாப்பள்ளிக்கூடங்களிலும், தரம் இவ்வுடன் மாணவர்களுக்கு படிப்பிக்கப்படலாம்.

சீனாவின் அணு நீர்மூழ்கிக் கப்பல் அமெரிக்கா எச்சரிக்கை

சான்பிரான்ஸிஸ்கோ நவ20

அணுஏவுகணைகளுடன் கூடிய நீர்மூழ்கிக்கப்பலை விரைவில் சீனா தயாரிக்கக் கூடும் என்று அமெரிக்காவின் மேற்குக் கடற்கரைத் தளபதி எச்சரித்துள்ளார்.

வேலைநிறுத்தமிரட்டல்

யூனியன் பிரதிநிதிகளை பிரதமர் சந்திப்பார்

கொழும்பு, திங்கள் தபால், தந்தித்தொடர்புப் பகுதி இன்ஸ்பெக்டர், என்ஜினியர்களின் வேலை நிறுத்த முன்னறிவித்தலைத் தொடர்ந்து அவர்களின் யூனியன் பிரதிநிதிகளை பிரதமர் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

இம்மாதம் 23-ம் திகதி இச்சந்திப்பு நடைபெறும்.

தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படாததால் தாங்கள் இம்மாதம் 27-ந் திகதி முதல் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்போவதாக ஐயாயிரம் அங்கத்தவர்களைக் கொண்ட தபால் தந்தித் தொடர்புச் சேவை இன்ஸ்பெக்டர், என்ஜினியர்கள் யூனியன் தபால் மா அதிபருக்கும், பிரதமருக்கும்தெரிவித்திருந்தது.

50 வருடங்களில் இந்திய சனத்தொகை

சீனாவைவிட அதிகரிக்கும்

நியூயோர்க், நவ.20

இன்னும் 50 வருடங்களில், இந்தியாவின் சனத்தொகை சீனாவின் சனத் தொகையைப் பார்க்கிலும் அதிகமாக இருக்கும். அப்போது உலகின் எல்லா நாடுகளிலும் இந்தியாவே அதிக சனத்தொகையுள்ள நாடாக இருக்கும்

இத்தகவல் ஐ. நா. வின் உலக நாடுகள் சனத்தொகை பற்றிய வருடாந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது.

வங்கிக்கிளை திறப்புவிழா ஒத்திவைப்பு

புத்தளம், திங்கள்

புத்தளம் இலங்கை வங்கிக்கிளை நாளை திறப்பதற்குரிய ஆயத்தங்கள் மும்முரமாக நடைபெற்றன. நேற்று உத்தியோகத்தர்களும்வந்து ஏற்பாடுகள் செய்தனர். பிரிட்டனின் நாணய மதிப்பு குறைப்புக் காரணமாக இவ்வைபவம் 30-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பெயர்ப் பலகையில் தமிழ்கொலை

மூதூர், திங்கள

மூதூர் பிரதான வீதியில் உள்ள கமத்தொழில் உத்தியோகத்தரின் காரியாலயத்தைக் குறிக்கும் பெயர்ப்பலகையில் அதன் தமிழ் எழுத்து கொலை செய்யப்பட்டுக் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

விற்பனைக்கு

சோக்கேஸ் ..

புத்தம்புதிய 2 சோக்கேஸ் (Show-Cases) ஒரு ராக்கை (Rack) விற்பனைக்குண்டு. கீழ்க்காணும் விலாசத்தில் பார்வையிடலாம். 358. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2140

தேவை

எமது தொழிற்சாலையில் வேலைசெய்வதற்கு படித்த பெண்களும், சைக்கிள் டிலிவரிக்கு ஆண்களும் தேவை. நற்சான்றுப்பத்திரங்களுடன் நேரில் வரவும். ஷணாஸ், பஸ்ஸ்ராண்ட் எதிரில், யாழ்ப்பாணம். 2141

காமராஜ்-இந்திரா சந்திப்பு

புதுடில்லி, நவ. 20

அகில இந்திய காங்கிரஸ் அக்கிராசனர் திரு காமராஜ் நேற்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து, அடுத்த அக்கிராசனர் தெரிவுபற்றி பேச்சுவார்த்தை நடத்தினார்.

மனோகரா
யாழ்ப்பாணம்
Daily at
4-45, 7-00, & 9-45p.m.
BEAUTIES by NIGHT
(Adults Only)
Also Showing
World Cup Final Football
England vs. W. Germany

கொழும்பில் நான்குமாடி நவீனரயில் நிலையம்

கொம்பனித்தெரு, திங். நான்கு மாடிகளைக் கொண்ட நவீன முறையிலான புகையிரத நிலையமொன்றை முப்பது லட்சம் ரூபாய் செலவில் கொழும்பு கோட்டைப்புகையிரத நிலையத்திற்கு அண்மையில் வெகு விரைவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப்புகையிரத நிலையம் அமைக்கப்பட்டதும் தூரத்து இடங்களுக்குச் செல்லும் புகையிரதம் மட்டுமேஇங்கு நிறுத்தப்படும் என்றும் கொழும்புக்கு அண்மையிலுள்ள இடங்களுக்குச் செல்லும் புகையிரதம் தற்போதைய நிலையத்தில் நிறுத்தப்படும் என்றும் அறியப்படுகின்றது. புதிதாக அமைக்கப்பட இருக்கும் புகையிரத நிலையத்தில் பிரயாணிகள் தங்கிச் செல்வதற்கான வசதியான அறைகள், தனிப்பட்ட அறைகள், சிற்றுண்டிச்சாலைகள் முதலியனவும் நவீன முறையில் அமையும் எனவும் புகையிரத இலாகா உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

1800 ஏக்கர் வயல்களில் 38,000 மாணவர் களை பிடுங்கினர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை 1834 ஏக்கர் வயலில் மாணவர்கள் களை பிடுங்கியுள்ளார்கள். இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 38,005 மாணவர்கள் கலந்து களை பிடுங்கியுள்ளார்கள். இது இங்குள்ள நெல் வயல்களில் 10.ல் 6 பங்காகும்.

இத் தகவல்கள் நேற்று இங்கு நடைபெற்ற களை பிடுங்கல் சம்பந்தமான மகாநாடொன்றில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற இம் மகாநாட்டுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா தலைமை வகித்தார்.

தென்மராட்சிப் பகுதியில் 315 ஏக்கரிலும், பளைப்பகுதியில் 120 ஏக்கரிலும், துணுக்காய் பகுதியில் 25 ஏக்கரிலும், பூனகரிப் பகுதியில் 80 ஏக்கரிலும், வலி-வடக்குப் பருதியில் 66 ஏக்கரிலும். யாழ்ப்பாணப் பகுதியில் 33 ஏக்கரிலும், பருத்தித்துறைப் பகுதியில் 350 ஏக்கரிலும், கிளிநொச்சிப் பகுதியில் 91 ஏக்கரிலும், வலி கிழக்குப்பகுதியில் 331 ஏக்கரிலும், வலிமேற்குப் பகுதியில் 333 ஏக்கரிலும். தீவுப்பகுதியில் 90 ஏக்கரிலும் மாணவர்கள் களை பிடுங்கியுள்ளதாகவும் இங்கு காரியாதிகாரிகளால் புள்ளி விபரங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது.

இதில் கூடுதலாக வலிமேற்குப்பகுதி மாணவர்களே கலந்து கொண்டதாவும் இங்கு விசேஷ மாகத் தெரிவிக்கப் பட்டது. வலிமேற்கிலிருந்து 10.400 மாணவர்கள் களைபிடுங்கியதாகக் குறிப்பிடப்பட்டது. மற்றைய மாணவர்கள் விபரம் பின்வருமாறு.

தென்மராட்சி 7880, பளை 550, துணுக்காய் 660, பூனகரி 400, வலிவடக்கு 2000, யாழ்ப்பாணம்1334, பருத்தித்துறை3000, கிளிநொச்சி 2062, வலி.கிழக்கு 8679, தீவுப்பகுதி 1050.

தொடர்ந்து மழை பெய்யுமானால் மிகுதிக்களைகளும் அடுத்த இருவாரத்தில் பிடுங்கிமுடிக்கலாமென இங்கு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. மாணவர்களுக்கான இ. போ. ச. போக்குவரத்து வசதிகள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த காரியாதிகாரிகள், இ, போ. ச. அதிகாரிகள், கல்லூரியதிகாரிகள், ஆகியோர்களும் இம்மகாநாட்டில்கலந்து கொண்டார்கள். (ந.நி)

இலங்கை-ரஷ்ய திருமணம்

மாஸ்கோ, நவ. 20

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் மகன் சுரேந்திரா ரஷ்ய மங்கையொருவரை காதலித்துக் கைப்பிடித்துள்ளார். சோவியத்புரட்சியின்பொன் விழாக்கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளச் சென்ற டாக்டர் விக்கிரமசிங்கா இத்திருமணத்தினால் பெரு மகிழ்ச்சியடைந்துள்ளார்.

இப்பொழுது நடைபெறுகிறது

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

தினசரி பி.ப. 2-30, மாலை -20, இரவு 9-30 மணிக்கு

பிளாஸா [வெள்ளவத்தை] **கெப்பிட்டல்** [கொழும்பு]

மைலன் [கொட்டாஞ்சேனை]

விஜயா [மட்டுநகர்] **ஸ்ரீகிருஷ்ணா** [திருமலை]

மற்றும் நாலு திரைகளில்

எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்

முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றி கண்ட இன்பச் சித்திரம்!

கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.

மற்றும்

ஜெயலலிதா, ஜெயந்தி நம்பியார், அசோகன், நாகேஷ், ஸ்ரீராம், மனோரமா, பி. கே. சரஸ்வதி நடித்த

தேவர் பிலிம்ஸ்

முகராசி

டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்

இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

6-வது வாரம்

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] **லக்ஷ்மி** [கரவெட்டி]

ஜெய்சங்கர் — ஜமுனா — நாகேஷ் — பேபி பத்மினி நடித்த

ஏ. வி. எம்மின் ஜனாதிபதி பரிசுபெற்ற

குழந்தையும் தெய்வமும்

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Only
Dana Andrews
in
M. G. M.
52 MILES TO TERROR
in Colour

அபராதம் விதிக்கப்பட்டார்

புத்தளம், திங்கள்

முனமலகஸ் வெவவைச் சேர்ந்த ஹெற்றி புஞ்சினான என்பவர் வில்பத்து தேசிய வனபாதுகாப்பு எல்லைக்குள் அத்துமீறிச் சென்றதாகவும் சட்டவிரோதமாக துவக்கு வைத்திருந்ததாகவும் வன பரிபாலன அதிகாரியினால் புத்தளம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரி குற்றவாளியாகக் காணப்படவே முதலாவது குற்றத்திற்கு 50 ரூபாவும், இரண்டாவது குற்றத்திற்கு 100 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. பணம் கட்டத் தவறினால் ஒவ்வொரு குற்றத்திற்கும் ஆறுமாதக் கடூழியச் சிறையும் அளிக்கப்பட்டது.

ரூபா 400 அபராதம்

புத்தளம், திங்கள்

கற்பிட்டி கப்பலடியைச் சேர்ந்த என். எம். எல். அஹமது காசிம், எஸ். எம். சதக்கு, எஸ். எம். முகமது இபுறாகிம் ஒருமடுவில் ஒளி மறைவு வீடு கட்டிச் சட்ட விரோதமான துவக்குடன், மிருகத்தைச் சுடக்காத்திருந்தனர் எனத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரிகள் மூவரும் குற்றவாளிகளாகக் காணப்படவே 400 ரூபாய் அராதம் விதிக்கப்பட்டது.

கூட்டுறவு மீன்பிடி சங்கம்

அளவெட்டி, திங்கள்

ஊறணி புனித அந்தோனியார் கூட்டுறவு மீன்பிடிச் சங்க அங்குரார்ப்பணம் ஊறணி புனித அந்தோனியார் சனசமூக, கிராம முன்னேறச் சங்க சபாமண்டபத்தில் திரு. ம. மரியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்:- வணபிதா பி. எஸ். மரியதாசன், தலைவர்:- திரு. பி. நேசமுத்து, உபதலைவர் - திரு. ம. மரியாம்பிள்ளை, காரியதரிசி:- திரு. மு. செல்வராசா, தனாதிகாரி:-திரு. போ. மார்க்கு ஐ துபேர் கொண்ட நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது.

ஒரு வாரத்தில் 33,000லாபம்

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலை துறைமுகம் தேசியமயமாக்கப் பட்டதைத் தொடர்ந்து துறைமுகம்(சரக்கு) கூட்டுத்தாபனம் இத்துறைமுகத்தின் சகலவித ஏற்றுமதி, இறக்குமதி வேலைகளைக் கையாளத் தொடங்கியபின்பு இங்கு தேயிலை ஏற்றுமதிக்காகவென "கிளென்கைல்" என்னும் சரக்குக் கப்பல் முதல் முதலாக வந்தது இக்கப்பலில் மொத்தம் 3,747,354 றாத்தல் தேயிலை ஏற்றுமதியாகி லண்டனுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஏழு நாட்களில் இத்தேயிலையை ஏற்றுமதியாக்கிய போது "ஸ்ரீவிடோறிங்" பகுதியிலிருந்து மட்டும் மொத்தவாக 33,000 ரூபாவிற்குக் குறையாமல் வருமானம் கிடைத்துள்ளதாம். ஏற்றுமதியாகும் ஒவ்வொரு 10,000 தேயிலைக்கும் 88பேர் வீதம் வருமானம் கிடைப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ராமராவ் - ராஜசுலோசனா
நடித்த
ராஜசேவை

களைபிடுங்கினர்

தாளையடி, திங்கள்

செம்பியன்பற்றுக் கிராம சபைபகுகுயை சேர்ந்தபாடசாலைகள் அனைத்தும் இவ்வாரம் முழுவதும் அவ்வப் பாடசாலைகளுக் கண்மையில் உள்ள வயல்களில் களைபிடுங்குவதில் தீவிரமாக ஈடுபட்டன. ஃ ஃ ஃ

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 150 மாணவ மாணவிகள் நேற்று முதல் மீண்டும் வயல்களில் களை பிடுங்குவதில் ஈடுபட்டுள்ளனர். இவர்களை ஊக்குவிப்பதக்காக ஆசிரிய ஆசிரியைகளும் கலந்துள்ளனர். ஃ ஃ ஃ

புதுக்குடியிருப்பு, திங்.

அம்பலவன் பொக்கணை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவ, பாணவிகள் தலைமை ஆசிரியர் திரு. எம். இரத்தினசிங்கம் தலைமையில் விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் திரு ஆர். கதிரவேலுவின் உதவியுடனும் கோயிலடி வயலில் களை பிடுங்கினர்.

புதுக்குடியிருப்பு மாணவர்களும் ஆசிரியர்களும் புதுக்குடியிருப்பு விவசாய விஸ்தரிப்பு உத்தியோக்ஸ்தர் திரு. இ. த. பத்திநாதனின் தலைமையில் கடந்த நான்கு நாட்களாகக் களை பிடுங்கலில் ஈடுபட்டனர்

மந்திரிக்கு முறையீடு

மூதூர். திங்கள்

மூதூர்ப் பகுதியில் உள்ள ஆயத்துறைகளில் வேலை செய்வோர் மழைக்காலங்களில் பாதுகாப்பாய் தொழில் புரிய மழைக் கோட்டுகள் வழங்குமாறு கோரி பகிரங்க வேலைப்பகுதி அமைச்சுக்கு மூதூர் இரண்டாவது பிரதிநிதி மகஜர் ஒன்றை அண்மையில் அனுப்பிவைத்துள்ளார்.

திருமலையில்

குத்துச் சண்டைப் போட்டி

திருக்கோணமலை, திங்கள்

"தற்பாதுகாப்புக் குத்துச் சண்டைச் சவால்" என்னும் பொதுமக்கள் காட்சிக்கான ஒரு நிகழ்ச்சி இங்கு 22ம் 23ம் திகதிகளில் திருக்கோணமலை டொக்யாட் ஜிம்னாசியம் திடலில் நடைபெறவுள்ளது.

பவரின்
காய்கறிப் போரை

ஏ. பவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணய மதிப்புக் குறைப்பை தொடர்ந்து பிரிட்டனில் அரசியல் நெருக்கடி ஏற்படலாம்

நடவடிக்கைக்கு முக்கிய காரணம் துறைமுக வேலை நிறுத்தம் எனக்கருத்து

லண்டன், நவ. 20

பிரிட்டன் தனது ஸ்டேர்லிங் பவுணை நாணய மதிப்புக் குறைவு செய்ததைத் தொடர்ந்து உலக நாடுகளனைத்திலும் அதன் விளைவுகள் பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளன.

ஸ்டேர்லிங் பவுணை நாணய மதிப்புக் குறைவு செய்தது பிரிட்டனுக்கு வெற்றி கரமானவொரு நடவடிக்கையே என நேற்று பிரிட்டிஷ் அரசாங்கம் அறி வித்தது.

ஆனால் நாணய மதிப்புக் குறைவினால் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சனின் தொழிற்கட்சி அரசாங்கத்துக்கு உள்நாட்டில் பலத்த அரசியல் நெருக்கடி தோன்றலாம்.

லண்டனிலுள்ள பிரதமரின் வாசஸ்தலமாகிய இல. 10, டவுனிங் ஸ்ரீட்டில் நேற்றுப் பெருந்தொகையான மக்கள் கூடி நின்று அரசாங்கத்துக்கு எதிராக கோஷமிட்டனர். அருகேயுள்ள தமது இல்லத்துக்குச் சென்றுகொண்டிருந்த பிரிட்டிஷ் நிதிமந்திரி மீது முட்டை வீசப்பட்டது.

வில்சன் விளக்கம்

நேற்றிரவு பிரிட்டிஷ் மக்களுக்கு டெலிவிஷன் மூலம பேசுகையில் பிரிட்டிஷ் மக்கள் இப்போது தமது சொந்தக் கால்களில் நிற்பதாகப் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் கூறினார். மேலும் மேலும் பிற நாடுகளிடமிருந்து பிரிட்டன் கடன் வாங்குவதைத் தடை செய்யுமுகமாகவே நாணய மதிப்புக் குறைப்பு நடவடிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் மேற்கொண்டதாக அவர் மேலும் விளக்கினார்.

வில்சன் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிர்க்கட்சியான கன்சர் வேட்டிவ் கட்சிகடுமையான எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சி புகார்

நாணய மதிப்புக் குறைப்பு பற்றி மக்களிடம் தமது கட்சியின் கருத்துக்களை வெளியிடுவதற்கு பிரிட்டிஷ் ஒலிபரப்பு நிறுவனமாகிய பி. பி. ஸி. தடைவிதித்துள்ளதாக எதிர்க்கட்சித்தலைவர் திரு எட்வார்ட் ஹீத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

துறைமுக வேலைநிறுத்தம்

இதற்கிடையில் பிரிட்டிஷ் துறைமுகச் சிப்பந்திகளின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது. இந்த வேலை நிறுத்தம் தொடங்கி இரு வாரங்களுக்கு மேலாகி விட்டது. பிரிட்டிஷ் அரசாங்கம் தனது ஸ்டேர்லிங் பவுணை நாணய மதிப்புக் குறைப்பு செய்வதற்கு முக்கிய காரணம் இந்தத்துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தமேஎனப் பலராலும் கருதப்படுகிறது. இவ்வேலை நிறுத்தத்தினால் இதுவரை 10 கோடி பவுனுக்கு பிரிட்டிஷ் ஏற்றுமதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்று துறைமுக வேலை நிறுத்தத்தை கைவிடுவது என்று கொண்டுவரப்பட்ட தொழிற்சங்க ஆலோசனையை 4,500 தொழிலாளரும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். வேலை நிறுத்தத்தைத் தொடருவது என அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

பிரிட்டிஷ் பவுண் நாணய மதிப்புக்குறைப்பை பத்தொடர்ந்து இஸ்ரேல், கொங்ஹொங், பிஜித்தீவுகள், அயர்லாந்து, டென்மார்க், ஸ்பெயின், மால்டா, கயானா ஆகிய நாடுகள் தமது நாணய மதிப்புக்களைக் குறைத்துள்ளன. அமெரிக்காவும், கனடாவும் தமது வங்கி விகிதங்களை அதிகரித்துள்ளன.

அமெரிக்கா 1/2 சதவிதமும் கனடா ஒருசத வீதமும் கூட்டியுள்ளன.

பொதுச்சந்தை நாடுகள்

பிரசல்ஸில் கூடியுள்ள ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகளின் நிதிமந்திரிகள் பிரிட்டிஷ் நாணய மதிப்புக் குறைப்பின்நிழலில் பொதுச் சந்தையில் பிரிட்டனைச் சேர்க்கும் விஷயம்பற்றித் தொடர்ந்து விவாதித்தனர்.

சர்வதேச நிதி நிறுவனத்திடமிருந்து பிரிட்டன் கோரியுள்ள 14 கோடி பவுண் கடன் நிதிக்கு உதவி வழங்குவதென ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகள் முடிவுசெய்துள்ளன.

ஆனால் பொதுச்சந்தை நாடுகள் தாம் நாணயமதிப்புக் குறைப்புச்செய்வதில்லை என அறிவித்துள்ளன.

பழைய டில்லியில் பெரும் தீ விபத்து

ரூ. 2 கோடிக்கு பொருள் நஷ்டம்

புதுடில்லி, நவ. 20

பழைய டில்லியில் ஏற்பட்ட கோர தீ விபத்து ஒன்றில் 80 கடைகளும், 17 சிறு கடைகளும் சாம்பலாகின. ரூ 2 கோடி மதிப்புள்ள சொத்துக்களுக்கு இதனால் நஷ்டமேற்பட்டுள்ளது.

பழைய டில்லியில் நயகாத்ராவில் உள்ள பெரிய ஜவுளி மார்க்கெட்டில் தான் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. முதலில் ஒரு கடைக்குள் வெளியே இருந்த டெரிலின் துணி மூடைகள் தீப்பிடித்துக்கொண்டது. உடனே தீ நொடியில் மற்றக்கடைகளுக்கும் பரவிவிட்டது.

விபத்தில் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. 2 பேர் காயமடைந்தனர்.

மேற்கு வங்காளத்தில் அரசியல் நெருக்கடி

சட்டசபை கூட்டுவது பற்றி பிரச்னை

கல்கத்தா, நவ. 20

புதிய இந்தியக் கட்சியான பாரதிய கிராந்தி தள்ளின் தலைவரான பேராசிரியர் ஹுமாயின் கபீர், நேற்று மேற்கு வங்காள முதல் மந்திரி திரு. அஜோய் முக்கர்ஜியைச் சந்தித்துப் பேசினார். மேற்கு வங்காள அரசியல் நிலைமை பற்றியே அவர்கள் பேசினர். ஆனால், பேச்சுக்களின் பின், இரு தலைவர்களும் எதுவும் குறிப்பிட மறுத்துவிட்டனர்.

திரு. கபீர், மேற்கு வங்காள கவர்னரையும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. தாஸ் குப்தாவையும் கண்டு பேசினார்.

கடிதத்துக்கு பதில்

மேற்கு வங்காள சட்டசபையை அடுத்த மாதம் 18-ந் திகதிக்கே கூட்டுவதென்றும், அதற்கு முன்னர் கூட்டவேண்டிய அவசியம் இல்லையென்றும் அறிவித்திருந்த முதல் மந்திரி திரு. முக்கர்ஜி, சட்டசபையைக் கூட்டுவது பற்றிய கவர்னரின் அதிகாரம் பற்றி சுப்ரீம் கோர்ட்டிடம் உத்தரவு பெறுமாறு ஆலோசனைகூறி, இந்திய ராஷ்டிரபதிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதற்கான பதில் ராஷ்டிரபதியிடமிருந்து இன்று கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பி. ஸி. சென் கோரிக்கை

இதற்கிடையில், முன்னாள் மேற்கு வங்காள முதல் மந்திரியான திரு. பி. ஸி. சென், நேற்று காங்கிரஸ் கூட்டமொன்றில் பேசுகையில், இன்னும் 3 நாட்களில்லாவிட்டாலும், அடுத்தஒரு வாரத்துக்கிடையேயாகிலும் சட்டசபையைக் கூட்டவேண்டும் என்று முதல் மந்திரி திரு. முக்கர்ஜியிடம் கோரிக்கை விடுத்தார்.

உண்மையில் மேற்கு வங்காள ஆளும் கட்சியான ஐக்கிய முன்னணியிலிருந்து விலகிய திரு. பி. ஸி கோஷ் தலைமையில் உருவாகும் அரசாங்கத்துக்குக் காங்கிரஸ் ஆதரவு அளிக்குமென்றும் திரு. பி. ஸி சென் வாக்குறுதியளித்தார்.

காந்திஜிக்கு மியூஸியம்

பூனே, நவ. 20

"பூனாவிலுள்ள எனது அரண்மனையை மகாத்மா காந்திக்கான தேசிய மியூஸியமாக்கப்போகிறேன். அதை எப்படிச்செய்யவேண்டுமென்பதை அறியவிரும்புகிறேன்" என்று ஆகாகான் இங்குநிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள ஆகாகான், உபராஷ்டிரபதி திரு. வி. வி. கிரிக்கு ஒரு விருந்து அளித்தார்.

'சைப்பிரஸ் மீது விமானங்களை பறக்கவிட வேண்டாம்'

துருக்கியிடம் யூ தாண்ட் கோரிக்கை

நியூயோர்க், நவ. 20

சைப்பிரஸ் மீது துருக்கி விமானங்களைப் பறக்கவிடுவதை நிறுத்திக்கொள்ளுமாறு ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட், துருக்கியைக்கோரியுள்ளார்.

அவர், ஐ. நா. பந்தோபஸ்து சபைக்குச் சமர்ப்பித்துள்ள ஓர் அறிக்கையில், சைப்பிரஸ் வானப்பிராந்தியத்தில் அடையாளங்காணமுடியாத சில விமானங்கள் பறந்து செல்வதை அங்குள்ள ஐ. நா. பார்வையாளர்கள் கண்டதாக அறிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிமானங்கள் துருக்கி விமானங்களே என சைப்பிரஸ், ஐ நா.வில் குற்றஞ் சாட்டியுள்ளது.

மே. ஜேர்மன் அதிபர் இந்தியா புறப்பட்டார்

இலங்கைக்கும் வருவார்

பொன், நவ. 20

மேற்கு ஜேர்மன் அதிபர் டாக்டர் கேர் கெயிஸிங்கர், இங்கிருந்து இன்று புதுடில்லிக்குப் புறப்பட்டார். இந்தியாவுக்கு ஒரு மேற்கு ஜேர்மன் அதிபர் விஜயம் செய்வது இதுவே முதற் தடவையாகும்.

அவர், இந்திய விஜயத்தின் பின்னர், பர்மா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்வார்.

நேற்று, இங்கு வெளியிட்ட ஒரு செய்தியில் தமது விஜயம், தாம் விஜயம் செய்யவிருக்கும் நாடுகளுக்கும் மேற்கு ஜேர்மனிக்குமிடையே நல்லுறவை வளர்க்க உதவுமெனத் தாம் நம்புவதாக டாக்டர் கெயிஸிங்கர் கூறினார்.

'ஆங்கிலமே இந்தியாவின் இணைப்பு மொழியாக வேண்டும்'

அண்ணா வலியுறுத்தல்

அண்ணாமலை, நவ. 20

ஆங்கிலமே இந்தியாவின் இணைப்பு மொழியாக நீடிக்க வேண்டுமென்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையில் தமிழக முதல் மந்திரி திரு. அண்ணாதுரை வலியுறுத்தினார்.

இந்தியை ஆட்சி மொழியாக ஏற்கும் படியான சூழ்நிலை வராமற் பார்த்துக்கொள்வதென மக்கள் உறுதிபூண்டுள்ளனர். அந்த உறுதியின் பிரதிபலிப்பாகவே இந்த அரசாங்கம் பதவிப் பொறுப்புக்கு வந்திருக்கிறது என்றார் முதல் மந்திரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க விமானங்கள் 17 சுடப்பட்டன

ஹனோய், நவ. 20

நேற்று நடைபெற்ற சண்டையில் 17 அமெரிக்கவிமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக வட வியட்னாம் அறிவித்துள்ளது. பல விமானிகளைக் கைப்பற்றியுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

தமது விமானங்கள் எதுவும் சுட்டு வீழ்த்தப்பட்டது பற்றி அமெரிக்க வட்டாரங்கள் இதுவரை ஊர்ஜிதம் செய்யாவிடினும், 6 விமானங்களைக் காணவில்லை என்பதை அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

மணிவாக்கு

தன்னுடைய மனிதத் தன்மையை உணர்ந்து விட்ட ஒரு மனிதன் கடவுளுக்கு மாத்திரமே பயப்படு.வான் வேறு யாருக்கும் அஞ்சமாட்டான். —காந்திமகான்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கூ கார்த்திகைமீ 5கூ(21-11-67)

மீண்டும் மலேரியா

மலேரியா நோய் மீண்டும் பரவத் தொடங்கியிருக்கிறது. இதைத்தடுப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகின்ற போதிலும் துரிதமான தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது மிக மிக அவசியம்.

மலேரியாவை முற்றாக ஒழித்துக்கட்டிவிட்டஒரே நாடு இலங்கை மட்டும் தான் என்ற பெருமைக்கு இப்போது இழுக்கு ஏற்பட்டுள்ளது. சென்ற வாரக் கடைசியில் கிடைத்ததகவலின்படி 1848 பேர் மலேரியாவினால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படாவிட்டால் இது நாடுமுழுவதும் பரவக் கூடும்.

மாணிக்கக்கல் எடுப்பதற்காக சட்டவிரோதமான முறையில் அம்பன்கங்கை, களுகங்கை, கிரிஓயாக்கரையோரங்களில் தோண்டப்பட்ட கிடங்குகளில் நீர் தேங்கிநின்று அங்கு நுளம்புகள் உற்பத்தியாவதாகவும் இவையே மலேரியாவைப் பரப்புவதாகவும் சுகாதார இலாகா கருதுகிறது. இக்கிடங்குகளை நிரப்புவதற்கு இராணுவத்தின் உதவியையும் சுகாதார அமைச்சு கோரியிருக்கிறது. வரண்டபிரதேசப் பகுதிகளில் மலேரியா போன்ற தொற்றுநோய் பரவுவதற்கு நீர்ப்பாசன இலாகா, வன இலாகா, காணி அபிவிருத்தி இலாகா ஆகியமூன்று அரசாங்க இலாகாக்களுக்கிடையில் இணைப்பும், ஒத்துழைப்பும் இல்லாதிருப்பதும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது.

உணவில தன்னிறைவு காணும் நோக்கத்துடன் உணவு உற்பத்தி இயக்கத்தை ஆரம்பித்து அரசாங்கம் அதைத்தீவிரப்படுத்தியிருக்கிறது. பிரதமர் நாட்டின் உலர பகுதிகளுக்கும் தாமே சென்று உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் குறைகளைக் கேட்டறிந்தார்; அவர்களுக்கு உற்சாகமும் ஊட்டினர். உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குரிய அரசாங்கஇலாகாக்களிடையிலேயே ஒத்துழைப்பும் ஒற்றுமையும இல்லையெனில் எப்படி உணவு உற்பத்தி அதிகரிக்க முடியும்? காடுகள் வெட்டி அழிக்கப்படும்போது அது பற்றிய தகவல்மலேரியாத்தடுப்பு இயக்கத்தினருக்குத் தெரிவிக்கப்பட்டால் அவர்கள் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மலேரியாவுக்கு அஞ்சியேமுன்னர்குடியேற்றத் திட்டங்களுக்குச் சென்று குடியேற மறுத்தனர். மீண்டும் மலேரியா பரவத் தொடங்கினால் குடியேற்றத் திட்டங்களிலுள்ளவர்கள்கூட அவற்றைக் கைவிட்டுவிட்டு ஓடிவரமுன்வரலாம். இதனால் உணவு உற்பத்தி வெகுவாகப் பாதித்து, இன்றைய நிலையில், நாட்டில் பஞ்சத்துக்கேவழிவகுத்துவிடும்.

இதற்கு இடம்கொடுக்காமல் மலேரியாவைத் தடுப்பதற்கு பழைய டி. டி. டி. மருந்தை மட்டும் நம்பியிராமல் புதிய, நவீன மருந்துகளை உபயோகித்து, துரிதமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

இன்றைய நலன்

21-11-67

செவ்வாய்க்கிழமை

கார்த்திகை மாதம் 5-ந் திகதி

நட்சத்திரம்- திருவாதிரை. பகல்10-15 மேல் புனர்பூசம்.

திதி- சதுர்த்தி பி. ப. 3-28 மேல் பஞ்சமி.

சுபநேரம்- 10-40—12-10.

ராகுகாலம்- 3-10—4-40.

மேஷம்-பொருள்வரவு, புகழ்பாட வாழ்வீர்.

ரிஷிபம்- கண்துடைப்பு வேலை, கவனம் வேண்டும்.

மீதுனம்- கால்நடை நஷ்டம், காரிய தாமதம்.

கடகம்-தேனைவாழ்வு, தேடியது கிடைக்கும்.

சிம்மம்- தற்பெருமை, தடுமாற்றம் உண்டு.

கன்னி-வாகன நலன், வளம் பெறும் நிலை

துலாம்-பிள்ளைப்பாசம், கொள்ளை இன்பம்.

விருச்சிகம்- கருடப் பார்வை கத்திருக்கும் பகை.

தனுசு-இல்லறம் இனிக்கும் விருந்துமுண்டு.

மகரம்-கரும்பாக இனித்தது வேம்பாகக் கசக்கும்.

கும்பம்-பெற்றோர்நலன், பெருமையுமுண்டு.

மீனம்- முயற்சி வெல்லும், முதலிடம் உண்டு.

—சோதிடக் கலாநிதி—

திருமலை வேலுப்பிள்ளை

நால்வர் அடங்கிய குடும்பம் கொலை

வீட்டுக்கும் தீ

பீஜப்பூர், நவ 20

மகாராஷ்டிரத்தில் உள்ள பீஜப்பூர் ஜில்லாவில் ஜாம்காண்டி என்னும்ஊரில் ஒரு குடும்பமே கொலை செய்யப்பட்டது. அவர்கள் வீடும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

அந்த ஊரில் சிதலிங்கப்பா கான பஸப்பா என்வரும், அவரதுமனைவி,4வயது 2வயதுமான இரு குழந்தைகளும் கொலை செய்யப்பட்டார்கள். பிறகு கொலை செய்தவர்கள் அவரது வீட்டையும் தீயிஞல் கொளுத்தினராம்.

இதுசம்பந்தமாக நாலு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் இந்திய கிரிக்கெட் கோஷ்டி

பேர்த், நவ. 20

பட்டோடி நவாப் தலைமையிலான 16 பேர் கொண்ட இந்திய கிரிக்கெட் கோஷ்டி ஆஸ்திரேலியா வந்து சேர்ந்துள்ளது. ஆஸ்திரேலியாவில் இக்கோஷ்டி 10 வார காலம் சுற்றுப் பயணம் செய்யும்.

கல்விக்கு மும்மொழி; நிர்வாகத்துக்கு இருமொழி

இலங்கையைப்போலவே இந்தியாவிலும் மொழிப்பிரச்னை இருக்கிறது. இந்தியாவில் பதினைந்து மொழிகள் உள்ளன. இலங்கையில் இருமொழிகள் ஆங்கிலத்தையும் சேர்த்தால் மும்மொழிகள்தான். இந்தியாவில் கல்விக்கு மும்மொழியும் நிர்வாகத்துக்கு இருமொழியும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மொழிப்பிரச்னைக்குத் தீர்வு கிடைத்துவிடுமென்பதை இக்கட்டுரையாளர் எடுத்துக்காட்டுகிறார். இந்தியாவிலேயே இது சுலபமென்றால் இங்கு இது எவ்வளவு சுலபமாக இருக்கவேண்டுமே. போதனாமொழி ஒரு பிரச்னையாகியுள்ள இங்கு இது கல்வி அமைச்சரின் கவனத்தை ஈர்க்கவேண்டும்.

மொழி பற்றிய பிரச்னை மேலும் நீடிக்குமானால் நாட்டைப் பிளவுபடுத்தும் சக்திகள் எழுந்துவிடும். தீர்க்க தரிசனமும் ராஜதந்திரமும் இல்லாவிட்டால் இப்பிரச்னைக்கு வழிதேட முடியாது. தேசிய அடிப்படையிலேயே இதற்கு ஒரு முடிவு காணலாம். மத்திய அரசாங்கம் துராலோசனைகளுக்கு தலைபணிந்துவிட்டதென்ற அபிப்பிராயம் எழவிடப்படாது.

பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி உத்தியோக மொழி மசோதா பற்றிய முடிவு பின்போடப்படமாட்டாதென்று தென்னகமக்களுக்கு உறுதி அளித்தது இந்நிலையில் வரவேற்கத்தக்கது. மும்மொழிகளை அவர் விரும்புவதும் குறிப்பிடத்தக்கது.

மொழிப் பிரச்னை பல கோணங்கள் கொண்டதாகையால் சகலகோணங்களிலிருந்தும் அதற்குத் தீர்வு காணவேண்டும். கல்வி, நிர்வாகம், அரசியல் போன்ற பல விஷயங்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. கல்வித் துறையில் ஒரு சமரசமான முடிவு ஏற்பட்டுவிட்டால் மற்ற விஷயங்களும் சுலபமாகும்.

கல்வி நிலையங்களில் எந்த மொழி போதனைமொழியாயிருக்கவேண்டும், அதை எப்பொழுது என்ன வகையில் அமுல்நடத்தவேண்டும் என்ற விஷயமாகவே அந்தமிலாத பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருப்பது வருத்தமானது.

போதனாமொழிபற்றி தீர்மானிப்பதில் மும்மொழித் திட்டத்தையா அல்லதுஇருமொழித் திட்டத்தையா ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற விஷயமாக பலவருடங்களாக கல்வி நிலையங்களிலும், கொமிஷன்களிலும், கொமிட்டிகளிலும் ஆராய்ச்சிகள்நடக்கின்றன. அத்துடன் தொடர்புமொழியாக ஒன்று அல்லது இரண்டா இப்பது; அப்படியானால் அவை எவை என்றும் சம்பாஷணைகள் நடக்கின்றன. இவற்றில் ஆங்கிலம் வகிக்கவேண்டிய இடம் முக்கியமாக ஆராயப்படுகிறது.

பிராந்திய மொழி (அல்லது தாய்மொழி) கனிஷ்ட

நீண்டகாலம் வேண்டும்

மூன்றும் வகுப்பு முதல் ஆங்கிலமும் அதற்குமேல் ஆறு, ஏழாம் வகுப்புகளில் இந்தியோ அல்லது வேறு இந்திய மொழியோ கற்பிக்கப்படவேண்டியது அவசியம் என்பதை உணரவேண்டும். உயர்வகுப்புகளில் ஆங்கிலத்துடன் வேறொரு ஐரோப்பிய மொழியும் கற்பித்தால் விஞ்ஞானப் படிப்புக்கு ஏதுவாயிருக்கும்.

ஒவ்வொரு ராஜ்யத்திலும் உயர்தரக் கல்வி அனைத்தையும் ஆங்கிலத்தில் புகட்டக்கூடிய ஒரு பல்கலைக்கழகமாவது வேண்டும்.

தொடர்புமொழி சம்பந்தமாகவேதான் பல சிக்கல்கள் உள்ளன. சகல விஷயங்களையும் சீர்தூக்கிப்பார்க்குமிடத்து மும்மொழித் திட்டத்தை ஆதரித்து, இந்தியையும் ஆங்கிலத்தையும் உத்தியோக மொழிகள் (தொடர்பு மொழிகள்) என்ற சட்டபூர்வமான அந்தஸ்து அளிப்பதே சரியெனத் தோற்றுகிறது.

ஆங்கிலத்தை தொடர்பு மொழியாக்கிஞல் தேசிய ஒற்றுமை பாதிக்கப் படுமென்று கூறுவது விபரிதமானது. இரு நூற்றாண்டுகள் கழிந்தாலும் இந்திய மக்களில் பத்துவீதமானவர்களே ஆங்கில அறிவு பெற்றிருந்தாலும் பாதகமில்லை. ஏனென்றால் அந்த பத்து வீதமானவர்களுக்குத் தான் தொடர்பு மொழி அவசியமானது.

—சி. வி. எச். ராவ்

லட்சம்புசல் நெற்களஞ்சியம்

மூதூர், திங்கள்

மூதூரில் ஒரு லட்சம் புசல் நெல் சேமித்து வைக்கக்கூடிய நெற் குதம்அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஆயத்தங்களை கமத்தொழில் இலாகாவினர்மேற்கொண்டு வருகின்றனர். மூதூர்ப்பகுதி நெல்வயல்களால் நிறைந்திருப்பதால் இத்தகைய குதம் மிக முக்கியமானதாய் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதே போன்று 50ஆயிரம் புசல் நெல் சேமிக்கக்கூடிய குதமொன்று கல்லாற்றிலும், இன்னுமொன்று தம்பலகாமத்திலும் அமைக்கப்படுமெனவும் தெரிய வருகிறது.

"இயற்கை மரணம்"

தாளையடி, திங்கள்

துன்னாலை வடக்கைச் சேர்ந்தவரும் உடுத்துறையில் சீவல் தொழில் செய்துவந்தவருமான முருகன் மாணிக்கம் என்பவர் வயிற்றுக்கோளாறு காரணமாகச் செம்பியன்பற்று அரசினர் கிராம வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு சில மணி நேரத்தில் மரணமான து குறித்து பச்சிலைப்பள்ளிப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரிதிரு கே. எஸ். இராசையா பிரேத பரிசோதனை நடத்தினர். இயற்கை மரணமெனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

முல்லைத்தீவு பஸ் - மாட்டுவண்டி விபத்து

"மாட்டுவண்டியைக் கண்டும் பஸ்சாரதி அலட்சியமாயிருந்தார்"

முல்லைத்தீவு, திங்கடந்த சனிக்கிழமையிரவு முள்ளியவளையில் நடைபெற்ற பஸ்—மாட்டுவண்டி விபத்து சம்பந்தமாக முல்லைத்தீவு அடிஷனல் மாஜிஸ்திரேட் திரு. கே. வி. நவரத்தினம்விசாரணை நடத்தினர். இவ்விபத்தில் வண்டியைச் செலுத்திச்சென்ற முகம்மதலி சாகுல் ஹமீது என்பவரும். வண்டி மாடுகளிரண்டும் ஸ்தலத்திலேயே மரணமானது தெரிந்ததே.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் பிரயாணம் செய்தவராஜ குமுளமுனையைச் சேர்ந்த மயில்வாகனம் நவரத்தினம் விசாரணையின்போது சாட்சியமளிக்கையில் விபத்துநடந்தசமயம்பிரஸ்தாப பஸ்ஸில் தாம் பிரயாணம் செய்ததாகவும், பஸ் சுமார் 30 மைல் வேகத்தில் சென்று கொண்டிருந்ததாகவும். சம்பவம் நடந்த இடத்திலிருந்து சுமார் 100 யார் தூரத்தில் ஒருமாட்டுவண்டி வருவதைதாய் கண்டதாகவும், வண்டியைக் கண்டும் பஸ் சாரதி பஸ்ஸை ஓரமாகச் செலுத்தவோ, நிறுத்தவோ, வேகத்தைக் குறைக்கவோ இல்லையெனவும், பஸ்ஸின் போக்கைக் கண்டு தாம் ஆசனத்தை விட்டு எழுந்துவிட்டதாகவும், பின்னர் திடீரெனக் கேட்ட சப்தத்தைத் தொடர்ந்து பஸ் அருகேயிருந்த வேலியைத் தாண்டி வயலில் போய்நின்றதாகவும் சொன்னார்.

மாஜிஸ்டிரேட்டின் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த சாட்சி, தாம் பஸ்ஸில் சாரதி ஆசனத்திலிருந்து நாலாவது ஆசனத்திலிருந்ததாகக் கூறினர். தம்முடன் கிட்டத்தட்ட 30 பேர் பஸ்ஸில் பிரயாணம் செய்ததாகச் சாட்சி சொன்னர்.

தாம் இறங்கிப் போய்ப் பார்த்தபோது வண்டிச் சாரதி மூக்காலும் வாயாலும் இரத்தம்பெருக உயிருடன் கிடந்ததாயும், ஒரு மாடு குற்றுயிராகவும் மற்றது இறந்தும்கிடக்கக் கண்டதாகவும், சம்பவம்பற்றி பொலிஸில் அறிவிக்கச் சென்றதாம் இடையே வந்த பஸ்ஸில் ஏறி திரும்பவும் ஸ்தலத்துக்கு வந்தபொழுது வண்டிச்சாரதி இறந்துகிடக்கக்கண்டதாகவும் கூறினர்.

பஸ்சாரதியில் மதுவாடை வீசியதாகவும் சாட்சிசொன்னார். பஸ்கண்டக்டர் கணபதிப்பிள்ளையும் சாட்சியளித்தார். தொடர்ந்து விசாரணை நடைபெறும்.

கூட்
நா
வடபகு
சபை

வடபகுதி ஐக்கி
பார்வைச்சபையின்
தாவது வருடாந்த
டத்திற்கு ப
கள் பரிசிலனைக்காக
பிக்கப்பட்டுள்ளன
சங்களும், ஐக்கி
கங்களும் தங்கள்
கால அனுபவங்
கொண்டுவந்தங்கள்
நோக்கத்துடனும்
றைவு பெறும் எண்

ஆசிரியருக்குக் கடி

திருவாதி

யாழ்ப்பாணம்
தையர் பஞ்சாங்கம்
திகை 23-ந் திகதி
டாம் நக்ஷத்திர,
வெம்பாவைப் பூஜ
என்னும், மார்கழி
2-ந் திகதி [17-12-6
நடேசர் ஆர்த்தி
சம் எனவும் 3-ந்
[18-12-67]உதயம்
ஆர்த்திராதரிசனம்
குறிக்கப்படுள்ளது.

கஞ்சனூர் பிலவங்க
சுத்தவாக்கியப் பஞ்
தில் மார்கழி மாதம்
திகதி மாணிக்கவாச
சவ ஆரம்பம்
(14-1-68)ஞாயிற்றுக்
காலை ஆர்த்திரா த
எனவும் குறிக்கப்
ளது.

ஆனந்தபோதினி
திருக்கணிதபஞ்சாங்
(14-1-68) ஆர்த்திர
னம் எனக் குறிக்
டுள்ளது.

சுவாமித்திரர்
கம் ஆர்க்காடுசேர்வு
பஞ்சாங்கம் என்
மார்கழி திருபத்
தாந்திகதியையே கு
ளன.

திருவெம்பாவை
டிக்கப்படவேண்டிய
ஒழுங்கு, முறை எ
றைப்பற்றி உத்தர
கமம், ஆர்த்திரா
லம் மிக விளக்கமா
கின்றது.

திருவெம்பாவை ஒ
உற்சவம். அதற்கு
நக்ஷத்திரமே பிர
மார்கழி மாதத்து
பிறை சதய நக்
முதல் திருவாதிரை
பத்து இரவுகள் (பி
அனுட்டிக்கப்படவே
விடிந்தபின் திருவு
னும் செய்தல் பி
திருவாதிரை இ
ரின் பிந்தியதே செ
படவேண்டும். இரவ
ரைகளும் பூரணை
னும்பிந்தியதேநோ
யது.

ஆதலின் எப்படி
தாலும் பின்னையதே
ளப்படவேண்டியது

"முன்னைய நக்
திலே செய்தால்
னுக்குக் கேடுண்டா
தியதுசெய்தபயன்
திரயோதசியோடும்
தசியோடும் கூடியத
வாதிரை வருமாயி
தோஷமுடைத்து.
மாயினும் அத்
ரையையே சாந்திபு
அனுட்டிக்குகளென்ற
திஞலே இரண்டாவ
வாதிரையையே
பூர்வமாக அனுட்
சாஸ்திர சம்மதமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நாட்டரிசி விநியோகம்

வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபை முயற்சி நிறைவேறுமா

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபையின் முப்பதாவது வருடாந்தக் கூட்டத்திற்கு பல பிரேரணைகள் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன பல சமாசங்களும், ஐக்கியநாணய சங்கங்களும் தங்கள் கடந்தகால அனுபவங்களைக் கொண்டு கஷ்டங்களை நீக்கும் நோக்கத்துடனும் தன்னிறைவு பெறும் எண்ணத்துடனும் தான் இப்பிரேரணைகளை ஆராய்வதற்காக அனுப்பியுள்ளனர் என்பது தெளிவு.

கூட்டுறவின் குறிக்கோளில் தான் நாட்டுயர்வின் பொறுப்பு தங்கியுள்ளதென்பதை சங்கங்கள் மாத்திரமல்லாது பொதுமக்களும் உணரத் தொடங்கி விட்டனர். பல வேறுபட்ட பிரச்னைகளும், கஷ்டங்களும் கூட்டுறவுக் கொள்கையினுல் குறைந்து வருவதையும் மக்கள் குறைபாடுகள் பெருகாது குறுக்கிக்கொண்டு செல்வதையும் நாம் இன்று காண முடிகின்றது.

கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் பொதுமக்களே ஜீவநாடியாக அமையவேண்டும். இதனை கடைப்பிடியாது ஒரு சங்கமோ அல்லது சமாசமோ பிழை விட்டால் அதனை பெரிதுபடுத்தி குறை கூறுவதில் பயனில்லை. உதாரணமாக ஒரு சங்கத்தில் ஒரு குறைபாடு உண்டானுல் அதற்கு பொறுப்பானவர்கள் அப்பகுதியிலுள்ள பொதுமக்களே என்பதை நாம் உணரவேண்டும்.

பொருட்களுக்குத் தட்டுப்பாடும், நெருக்கடியும் தோன்றும்பொழுதுதான் சாதாரணமாக பொதுமக்கள் சங்கங்களின் உதவியை நாடுகின்றனர். இத்தவறை உணர்ந்து ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களிலும் பொதுமக்கள் அங்கத்தவராக சேர்ந்து தங்கள் உரிமையையும் பொறுப்பையும் உணர்த்தவேண்டும். கருத்துக்கள் பேச்சுடன் நில்லாது செயற்படுத்தப்படல்வேண்டும்.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் வருடாந்த மகாநாட்டில் பங்கீட்டு முறையில் அரிசி விநியோகம் செய்யும் சங்கங்கள் பாவனையாளர்களுக்கு வேண்டிய மேலதிக அரிசியை கொள்வனவு செய்து விற்பனை செய்ய அச்சங்கங்களுக்கு அனுமதி வழங்குமாறு இம்மகாநாடு உணவு அமைச்சரை கேட்டுக் கொள்ளுகிறது' என்ற பிரேரணை மிகவும் அத்தியாவசியமானதாகும். பொதுமக்களை பகற்கொள்ளையடிக்குமளவிற்கு இன்று கள்ளச்சந்தையில் அரிசி ருபா 1-75 சதமாக உயர்ந்துள்ளது. சங்கங்கள் இவ்வரிசியை விற்பனை செய்வதற்கு என்ன தடை. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் உண்டென்பது தெரியவில்லை. கூட்டுறவுப் பகுதி அதிகாரிகளும் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளும் தங்கள் நிர்வாக முறைகளையோ அல்லது வேறு சிக்கல்களையோ காரணம் காட்டி இவ்விஷயத்தை மேலும் காலந்தாழ்த்தாது உடனடியாக செயற்படுத்தினுல் பொதுமக்கள் பெருமூச்சும் கள்ளச்சந்தை கெடுபிடியும் ஒரளவிற்கு குறையும்.

புதிய லொறிகளுக்கு விண்ணப்பம் செய்துள்ள சமாசங்களுக்கு தனிப்பட்டவர்களின் விண்ணப்பங்களிலும் பார்க்க முதன்மை கொடுக்க வேண்டுமென்ற பிரேரணையும் தென்மராட்சி ப. நோ. கூ. ச. சமாசத்தினுல் அனுப்பப்பட்டுள்ளது.

1957-ம் ஆண்டு பண்டார நாயக்கா [illegible] போது லொறிகளுக்கு வழங்கப்பட்டிருந்த 'ரூட் பேர்மிட்' முறை நீக்கப்பட்டது. லொறிகள் போகும் இடங்களுக்குக் கட்டுப்பாடிருப்பதனுல் தான் வாழ்க்கைச் செலவு உயருவதாகவும், அதன் காரணமாகவே லொறிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு முற்றுகவும் நீக்கப்பட்டது. இதன பலனுக லொறிகள் இலங்கையின் எல்லா இடங்களுக்கு செல்ல முடிந்தது

போக்குவரத்துச் செலவினுல் தான் பொருட்களின் விலைகள் உயருகின்றன என்ற தத்துவத்தைக் கொண்டு தான் அன்று பண்டாரநாயக்கா அரசாங்கம் அம்முடிவிற்கு வந்தது. அதேபோல் இன்று சமாஜங்களுக்கு புதிய லொறிகள் பெறுவதில் கஷ்டங்கள் இருக்கின்றன என்பது உண்மையே. கொழும்பில் கொள்வனவு செய்யும் சமாசங்கள் இதனுல் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளன. ஆகையால் தனிப்பட்டவர்களின் விண்ணப்பங்களிலும் பார்க்க சமாசங்களுக்கு போக்குவரத்து மந்திரி முதல் இடம் கொடுப்பதான் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தவராகின்றுர். அண்மையில் உணவு உற்பத்திக்காக சில கம்பனிகளுக்கு ஜீப் வண்டிகள் வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டன. ஆனுல் அதற்காக பெற்ற வாகனங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருகின்றன என புகார் செய்யப்பட்டுள்ளன. சமாசங்களைப் பொறுத்த வகையில் லொறிகள் பெறுவதற்கு அனுமதி வழங்கினுல் அச்சமாசங்கள் தங்கள் கடமைகளையும் பொறுப்பையும் உணர்ந்து செயலாற்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இதனையும்விட கூட்டுறவு இயக்கம் நாட்டில் வலுப்பெற்று வருவதால் இச்சங்கங்கள், சமாசங்கள் முதலியவற்றை ஒருமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

எஸ். கே. ரி.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

திருவாதிரை எப்போது?

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம் கார்த்திகை 23-ந் திகதி பூரட்டாதி நக்ஷத்திரத்திலே திருவெம்பாவைப் பூஜாரம்பம் எனவும், மார்கழி மாதம் …ந் திகதி [17-12-67] இரவு நடேசர் ஆர்த்திராபிஷேகம் எனவும் 3-ந் திகதி [18-12-67] உதயம் நடேசர் ஆர்த்திரா தரிசனம் எனவும் குறிக்கப்படுள்ளது.

…ஞ்சனூர்பிலவங்கவருஷம் …த்தவாக்கிய பஞ்சாங்கத்தில் மார்கழி மாதம் 21-ந் திகதி மாணிக்கவாசகர் உற்சவ ஆரம்பம் எனவும் (14-1-68) ஞாயிற்றுக்கிழமை …லை ஆர்த்திரா தரிசனம் எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

ஆனந்தபோதினி சுத்த …ருக்கணித பஞ்சாங்கத்தில் (14-1-68) ஆர்த்திரா தரிசனம் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

…சுமித்திர பஞ்சாங்கம் ஆர்க்காடுசர்வமுகூர்த்த பஞ்சாங்கம் என்பனவும் மார்கழி இருபத்தொன்பதாந்திகதியையே குறித்துள்ளன.

திருவெம்பாவை அனுட்டிக்கப்படவேண்டிய காலம், ஒழுங்கு, முறை என்பவற்றைப்பற்றி உத்தரகாரணம், ஆர்த்திராவிதிபடலம் மிக விளக்கமாகக் கூறுகின்றது.

திருவெம்பாவை ஒரு சக்தி உற்சவம். அதற்குச் சிவ நக்ஷத்திரமே பிரதானம். மார்கழி மாதத்து வளர்பிறை சதய நக்ஷத்திரம் முதல் திருவாதிரையீருகப் பத்து இரவுகள் (பின்னிரவு) அனுட்டிக்கப்படவேண்டும். …டிந்தபின் திருவுலாத்தாம் செய்தல் பிழை.

திருவாதிரை இரண்டுவர பிந்தியதே கொள்ளப்படவேண்டும். இரண்டு ஆதிரைகளும் பூரணையோடுவரின் பிந்தியதேநோன்புக்குரி…

ஆதலின் எப்படிப் பார்த்தாலும் பின்னையதே கொள்ளப்படவேண்டியது.

"முன்னைய நக்ஷத்திரத்திலே செய்தால் எஜமானனுக்குக் கேடுண்டாம். பிந்தியது செய்துபயன்பெறுக."

…யோதசியோடும் சதுர்த்தசியோடும் கூடியதாய் திருவாதிரை வருமாயின் அது தோஷமுடைத்து. அங்ஙனமாயினும் அத்திருவாதிரையையே சாந்திபூர்வமாய் அனுட்டிக்குகஎன்ற வசனத்தாலே இரண்டாவது திருவாதிரையையே சாந்திபூர்வமாக அனுட்டிப்பதே சாஸ்திர சம்மதமாம்.

மேலும் காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீசுவாமிஜி அவர்களும் பிந்திய திருவாதிரையையே கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார். சென்றவாரம் இந்திய தலங்களுக்கு யாத்திரை செய்து திரும்பிய நகுலேசுவர ஆலயக் குலங்கிழார் அவர்களும் சிதம்பரம் முதலிய தேவஸ்தானங்கள் பலவும் 14-1-68 ல் ஆர்த்திரா தரிசனம் செய்கின்றனர் என நேரில் அறிந்துவந்துள்ளார். ஈழத்துச் சிதம்பரம் முதலியனவும் அங்ஙனமே என அறிவிக்கிருர்கள். ஆதலின் ஏனைய குலங்கிழார்களும் ஏற்ற பெற்றிகொண்டு பயன்பெறுக.

கு. பாலசுந்தரக்குருக்கள்.
மாவிட்டபுரம்.

ஃ ஃ ஃ

இலங்கை பஞ்சாங்கங்கள்

தற்போது ஈழம் வாழ் இந்துசமயிகள் மத்தியிலே எழுந்துள்ள முக்கிய பிரச்னையாக விளங்குவது மார்கழி ஆர்த்திரா தரிசனதின நிர்ணயமாகும். இவ்விஷயத்தில் பலர் இரு பிரிவாக நின்று வெவ்வேறு தினங்களைக் கொள்ளுமாறு தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். ஆனுல் இலங்கையில் கையாளப்படும் வாக்கிய, கணித பஞ்சாங்க கர்த்தர்கள் இது குறித்து மார்கழி மாதம் 3-ந் திகதியையே ஆர்த்திராதரிசன தினமாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கைவாழ் இந்துசமூகத்தவர்கள் எத்தவொரு சிறுவிஷயங்களுக்கும் மேற்குறிப்பிட்ட இரு பஞ்சாங்கங்களையுமே அனுசரிப்பது வழமை. ஆனுல் தற்பொழுது எழுந்துள்ள இவ்விஷயத்தில் மாத்திரம் இலங்கைப் பஞ்சாங்கங்களுக்கு முரண்பாடான கருத்தினைச் சிலர் கொண்டுள்ளது வருந்தத்தக்கது.

ஆகவே இலங்கையிலுள்ள சைவப் பெரியார்களும், குருமார்களும் ஆலயபரிபாலகர்களும் இவற்றை ஆலோசித்து அடுத்துவரும் ஆர்த்திரா தரிசன தினமுட்பட எந்தவொரு விஷயங்களையும் இலங்கைப் பஞ்சாங்கங்களின்படியே நிர்ணயிக்க முயல்வது சிறந்ததாகும்.

ஆர். பி. ஹரன்
கோப்பாய்.

பாலைவனத்தில் மந்தமாருதம் போல!

நீதிமான், நெறியாளன் கண்ணியவான், சத்தியசீலன் என்ற அடைமொழிகள் இலங்கையிலுள்ள பொதுத்துறை பெரியோருக்கு சூட்டப்படுவது மிகமிக அபூர்வம். ஏனென்ருல் அத்தகைய குணதிசயங்களை காண்பதே அரிது

மந்திரிமாரும் நாடாளுமன்றத்தினரும், உயர்பதவி உத்தியோகஸ்தர்களும் எந்தவிதமான படுபாதகம் புரிந்துவிட்டும் தக்க இடத்தில் பந்தம் பிடித்தால் போதும் உத்தியோகத்தில் அட்டைபோல ஒட்டிக் கொண்டு இருந்து விடலாம்.

இப்படியான சூழ்நிலையில் முன்னுள் இ. போ. ச. தலைவர் ஆர். ரி. டி. சில்வா அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கையை எவ்வளவு தூரம் பாராட்டினுலும் தகும். மேலிடத்திலிருக்கும் பெரியவர்கள் இவருடைய நடத்தையை ஒருமுன்மாதிரியாகவும் லட்சியமாகவும் வைத்து அவரைப் பின்பற்றுவார்களானுல் பொதுமக்கள் அவர்கள்பால் வைத்திருக்கும் நன்மதிப்பு நூறுமடங்கு அதிகரிக்கும். அத்துடனல்வாமல் பட்டங்கள் பதவிகள், பணப்பைகளை விட ஒழுக்கமும் நெறியும் சிறந்தவை என்ற விழுப்பமான எண்ணம் பெபதுமக்களிடத்தில் இனிமேலாவது வளரும்.

திரு சில்வா ஓரிடத்தில் லஞ்சம் கொடுத்தார் என்று கூட்டுறவு மொத்த விற்பனை கொமிஷன் அவர்மீது குற்றஞ்சாட்டியது. அவா உடனே இ. போ. ச. வில் தமது தலைவர் பதவியை ராஜினுமாச் செய்ததோடல்லாமல், அவர்மீது சாட்டப்பெற்ற குற்றத்தை அதற்கென விருக்கும் லஞ்சவிசாரணை கொமிஷனே விசாரிக்க வேண்டுமென்று பகிரங்கமாகக் கூறியிருக்கிருர்

பாலைவனத்தில் மந்தமாருதம் வீசியது போன்ற இச்செயலை மற்றவர்களும் பின்பற்றவார்களா?

இத்தகைய கண்ணியமான நன்னடத்தைக்கு இந்தியாவிலும்இங்கிலாந்திலும் மந்திரிமார் முதற்கொண்டு பல பெரும் தலைவர்கள் உதாரணம் காட்டியிருக்கிருர்கள். எங்கேயோ ஒரு சிற்றூரில் ரயில் விபதது நடநததற்காக இந்தியாவின் ரயில்வே மந்திரி ராஜிநாமா செய்தார்! பின் ஒரு காலத்தில் அவரே இந்திய பிரதமராஞர், இப்படி இன்னும் பல திருஷ்டாந்தங்கள்.

நமது இலங்கையிலும் மேலிடங்களில் இருப்பவர்கள் [illegible] நெறி [illegible] மற்ற வர்களுக்கு வழிகாட்டிகளாயிருந்தால் அரசியலில் தூய்மையும். அரசாங்கத்திற்கு மதிப்பும், ஜனநாயக முறையில் நம்பிக்கையும் உண்டாகும்.

ஃ ஃ ஃ

வட பகுதியில் கள்ளக்கடத்தல் தொழில் மூலம் இவ்வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் மட்டும் அரசாங்கத்திற்கு இரண்டு லட்சத்து பத்தொன்பதாயிரம் ரூபாய் வருமானமாக கிடைத்திருக்கிறதாம். பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை விற்றும். கள்ளக்கடத்தல் செய்பவர்களுக்கு விதிக்கப்படும் அபராதம் மூலமும் இந்த ரொக்கம் பெறப்பட்டது. இங்கு மட்டும் இவ்வளவென்ருல் கொழும்பு, காலி, கட்டுநாயக்கா முதலிய இடங்களில் இன்னும் எவ்வளவு பணம் வருவாயாய்க் கிடைக்கும்?

இந்த செய்தியை பத்திரிகைகளில் பார்த்த ஒரு சக வழிப்போக்கன் 'இப்படி வருமானம் தரும் தொழிலை அரசாங்கம் ஏன் அடக்கப் பார்க்கிறது?' என்று கேட்டார்.

அவருக்கு என்ன மறுமொழி சொல்ல?

நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

யாழ்ப்பாணம்-சேந்தாங்குளம் பஸ்சேவை ஆரம்பிக்க முயற்சி

யாழ்ப்பாணம். செவ்வாய்
யாழ்ப்பாணத்திலிருந்து சேந்தாங் குளத்திற்கான இ.போ.ச.பஸ் சேவைவிரைவில் ஆரம்பிக்கப் படவிருக்கிறது. இதற்கான துரித வேலைகளை இ.போ.ச. தலைமைக் காரியாலயம் மேற்கொண்டுள்ளது.

இதுசம்பந்தமான மகாநாடொன்று நேற்று யாழ்ப்பாணம் செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா இம்மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். இ.போ.ச. தலைமைககாரியாலயத்தைச் சேர்ந்த திரு.என்.எஸ். கந்தையா, வடபிராந்திய இ.போ.ச.அதிபர் திரு. வேலுப்பிள்ளை ஆகியோர் உட்பட சண்டிலிப்பாய் சேந்தான்குளம்பஸ்பிரயாணிகள் சங்க நிர்வாகசபையினரும் இதற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த பல மாதங்களாக இந்தப் பிரயாணிகள் சங்கத்தினர் கேட்டுவந்த கோரிக்கைகள் இங்கு பரிசீலனைசெய்யப்பட்டன.

இங்கிருந்து பல உத்தியோகத்தர்கள் தினமும் யாழ்ப்பாணத்திற்குச் செல்லவேண்டியிருப்பதாகவும் மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்லவேண்டியிருப்பதாகவும் இந்த பஸ் சேவையின் அத்தியாவசியம் பற்றி இங்கு வலியுறுத்தப்பட்டது. முடிவில் பஸ்சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னேடியாக இங்குள்ள உத்தியோகஸ்தர்கள் மாணவர்கள் பற்றிய முழு விபரங்களையும் இ. போ, ச. பகுதியினர் இந்தபஸ்பிரயாணிகள் சங்கத்திடம் கோரியுள்ளனர்.

(ந. நி.)

அசையா மணி

யாழ்ப்பாணம், திங்கள்
மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன்கோவிலில் ஓர் அசையாமணிஅமைக்கப்படவிருக்கிறது. 1000 ருத்தல் எடையில் நல்லூரில் உருவாகவிருக்கும் இக்கோபுர அசையாமணி சம்பந்தமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாயும் இத்திருப்பணிக்கு இதுவரை 2,830 ரூபா சேர்ந்திருப்பதாயும், மேலும் இத்திருப்பணிக்கு 12,000 ரூபா தேவைப்படுவதாயும் இத்தொகை அடியார்களின் நன்கொடையாலேயே பெறப்படவேண்டியிருப்பதாயும் அடுத்த ஆண்டு ஜனவரிக்கு முன்னர் தேவையானபணம் முழுதும் கிடைத்துவிட்டால அசையாமணித் திருப்பணி வேலைகள் நிறைவேறிவிடுமெனவும் மேற்படி ஆலய பரிபாலனசபைத் தலைவரும் தர்மகர்த்தாக்களும் தெரிவிக்கிருர்கள்.

சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செவ்வாய்
யாழ்ப்பாணம் அரசாங்க செயலக நலன்புரிச் சங்கத்தின் ஆதரவில் இம்மாதம் 26ம் திகதி மேற்படி செயலக மண்டபத்தில் வடபகுதி மனநோய் வைத்தியசாலை டாக்டர். ரி. அருளம்பலம் விசேஷ சொற்பொழிவொன்றை நடாத்துவார்.

(ந. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி

விஞ்ஞான ஆசிரியர் சங்கத்துக்கு ரூபா 9 ஆயிரம் அன்பளிப்பு

புன்னாலைக்கட்டுவன், திங்கள்

ஆசியா பவுண்டேஷன் ஸ்தாபனம், வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கத்துக்கு மான்யமாக ரூ. 9035 அன்பளிப்பு வழங்க உறுதியளித்துள்ளது. இப்பணம் விஞ்ஞான நூல் பிரசுரத்துக்கென ஒதுக்கப்படும்.

விஞ்ஞான கல்வி போதனா முறை, தொண்டமானாறு நீரியல் ஆராய்ச்சி, மண்புழு இருல், பறவைகள் ஆகிய விஷயங்கள்பற்றிய இந்நூல்கள் கல்வி அமைச்சுக்கும் சமர்ப்பிக்கப்படும்.

இதுவரை வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம் நிலைநாட்டிய சாதனைகளைப் பாராட்டிய ஆசியா பவுண்டேஷன் காலப்போக்கில் மேலும் பல உதவிகள் புரிவதாகத் தலைவர் திரு. டி. புத்திரசிங்கத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

கரைச்சி

சைவ வித்தியாவிருத்திச் சங்கம்: நிதிமந்திரி அங்கீகாரம்

கரைச்சி, திங்கள்

கரைச்சி சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஓர் அங்கீகரிக்கப்பட்ட அற நிலைய மாகநிதி மந்திரியால் ஊர்ஜிதம் செய்யப்பட்டு அரசாங்க வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இச்சங்கத்துக்கு நன்கொடை அளிப்பவர்கள் அவர்கள் செலுத்தும் நன்கொடைகளுக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவார்கள்.

கரைச்சி சைவ வித்தியாவிருத்திச் சங்கம், 1952-ம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சிப் பகுதியில் கல்வி கலாச்சாரத் துறையில் பணி ஆற்றிவருகிறது. இப்பொழுது மகாத்மா காந்தியின் நிர்மாணத் திட்டங்களில் ஒன்றான ஆதாரக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்துமுகமாக கிளிநொச்சி 7-ம் வாய்க்காலின் "ஆதாரக் கல்விக்குருகுலம்" ஒன்றை நிறுவி அதில் அனுதரவான வறியபிள்ளைகளுக்கு இலவச உணவு வசதி செய்து கொடுத்து விவசாயம், கைத்தொழில் முதலான தொழிற் பயிற்சிகளும் குருகுல வாழ்க்கை முறைகளும் பயிற்றி வருகிறது. இதில் இப்பொழுது 40 பிள்ளைகள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

இக் குருகுலத்துக்கென வழங்கப்பட்ட 50 ஏக்கர் நிலத்தில் மாணவர் விடுதிகளும், தொழிற்கூடங்களும் அமைக்கப்பட்டு வருவதோடு விவசாயமும் செய்யப்பட்டு வருகிறது.

மோசமான பஸ் சேவை

புன்னாலைக் கட்டுவன், திங்கள்

யாழ்ப்பாணம் - பலாலி - கீரிமலை பஸ் சேவை படுமோசமடைந்து வருகிறது. உரிய காலத்தில் பஸ் கிடைக்காது. பிரயாணிகள் பல மணி நேரம் தவமிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வசாவிளான் சந்தியில் பல பிரயாணிகள் பலமணிநேரம் பஸ்ஸைக் காத்திருந்து விட்டுப்பின்னர் தனிப்பட்ட வாடகைக் காரில் யாழ்ப்பாணம் செல்ல நேரிட்டது. இதையிட்டு அரசாங்கத்தின்மீது மக்களின் அதிருப்தியை மேலும் அதிகரிக்கச் செய்வதுதான் இ. போ. ச.வின் நோக்கமாயிருக்குமோவெனப் பலரும் பேசிக்கொள்கின்றனர்.

தமிழில் கெனமன் வரலாறு

புன்னாலைக்கட்டுவன், திங்கள்

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. பீட்டர் கெனமனின் வாழ்க்கை வரலாறு தமிழில் வெளியிடப்பட விருக்கிறது.

திரு. பசில் பெரேரா என்னும் நியாயவாதி எழுதிய ஆங்கில நூலின் தமிழாக்கமாக வெளிவரும் இந்நூல் பல சுவையான அரசியல் துக்கடாக்களைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பொன்னாலைப் பாலத்தில் அபாயம்

சுழிபுரம், திங்கள்

பொன்னாலைச்சந்தியிலிருந்து காரைநகர் நோக்கிச் செல்லும் பாலத்தின் ஆறுவது மதவுக் கரையோரம்மிகவும் அவலமான நிலமையிலுள்ளது. கரைம்யாரப்பகுதி தண்ணீரினால் அரிக்கப்பட்டு பெரிய கிடங்குகளாகவும், இடிபட்டும் கிடக்கிறது. இதனால் எந்த நேரமும்ஆபத்து ஏற்படும் நிலையுள்ளது. மதகு உடன் திருத்தப்படாவிட்டால் பாலம் துண்டிக்கப்பட வேண்டியேற்படலாம் எனக் கூறப்படுகிறது.

மூன்றுவகை ஆசிரியர்கள்

புன்னாலைக்கட்டுவன், திங்கள்

"ஆசிரியர் மூன்றுவகை. மாணவரையும் பாடங்களையும் படிப்பிப்போர் முதல் வகை. பாடங்களை மட்டும் படிப்பிப்போர் இரண்டாம் வகை. ஒன்றுமேபடிப்பிக்காதவர்கள் மூன்றும் வகை."

இவ்வாறு யாழ். கல்வி நிலைய அதிபர் திரு. வி. இளையதம்பி, மேற்படி கல்வி நிலைய ஆசிரியரான திரு. நடராசா தம்பதிகளுக்கு அளித்த வரவேற்பில் குறிப்பிட்டார்.

தம்பதிகளுக்கு மாணவரும், ஆசிரியரும் அன்பளிப்புகள் வழங்கினர். வாழ்த்துப் பாக்களும், பாராட்டுரைகளும் வழங்கப்பட்டன.

நாவலர்விழா

சுழிபுரம், திங்கள்

பண்டத்தரிப்பு நாவலர் கல்விநிலையத்தினரால் மாதம் 24-ம்திகதி வெள்ளிக்கிழமை நாவலர் விழாக் கொண்டாடவிருக்கின்றனர். விரிவுரைகள், நாட்டுப்பாடல்கள், இன்னிசைகள் ஆகியனவிழாவில் இடம் பெறுமென்றும், பல சைவ அறிஞர்கள் உரையாற்றுவரென்றும் அறிவிக்கப்படுகிறது.

ஃஃஃ

யாழ்ப்பாணம், செவ்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நினைவு விழா ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில்வரும் வெள்ளிக்கிழமை கொண்டாடப் படவிருக்கிறது.

காலை 10மணி முதல்நடை பெறும் இவ்விழாவில் பல அறிஞர்கள் உரை நிகழ்த்தவிருக்கிறார்கள். இசை, கதம்ப நிகழ்ச்சிகளும் நடை பெறும்.

இடமாற்றம்

அளவெட்டி, திங்கள்

காங்கேசன்துறை மீன்பிடி பரிசோதகர் திரு. சு. எம். ஆர். இராசநாயகம் எதிர்வரும் தைமாதம் தொடக்கம் கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளாரென்றும் இவரது இடத்துக்குமட்டக்களப்பில் கடமையாற்றிய திரு. பாலசிங்கம் வருவாரெனவும் அறியவருகிறது.

உணவுற்பத்திக்கு மேட்டுநிலம்

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலையில் முதலிக்குளம் என்னுமிடத்திலுள்ள 45 ஏக்கர் மேட்டு நிலக்காணி உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் கொண்டுவரப் பட்டுள்ளது. அதிக உணவு பயிரிடும் நோக்கத்துடன் இக்காணிக்கு வேண்டிய நீரைத் தண்ணீர்ப் பம்புகள்மூலம் இறைத்துக் கொடுப்பதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

5 தினங்கள் பிரயாணம்தடை வீதியின் குறுக்கே பஸ் கிடக்கிறது

சாவகச்சேரி, திங்கள்

வீதியிலிருந்து விலகிய பஸ் ஒன்று வீதியின் குறுக்கே கடந்த ஐந்து நாட்களாகக் கிடக்கின்றன.

யாழ்ப்பாணம் - கேரதிவு வீதியில் மறவன்புலவு வள்ளக்குளம் வீதிக்குகே கடந்த புதன்கிழமை காலை இந்தபஸ் பாதையைவிட்டு விலகியது. ஆனால் இன்று வரை அது அவ்விடத்திலிருந்து எடுக்கப்படவில்லை சென்ற புதன்கிழமை முதல் இப்பாதையால் பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது,

பாதையைவிட்டு விலகிய பஸ் வீதியை மறித்து நிற்பதால் வேறு வாகனங்கள் எதுவும் இவ்வீதியால் செல்லமுடியாதிருக்கிறது. இதனால் இப்பகுதிப் பிரயாணிகள்பெரிதும்அவதியுறுகின்றனர்.

பஸ்விபத்திற் குள்ளாகிய தினம் முதல் ஒருவர் காவல் காத்து நிற்கினறார் கொழும்பிலிருந்து கிறேன் கொண்டுவரப்பட்ட பின்னரே இந்தப்பஸ் அங்கிருந்து மீட்கப்படுமென விசாரித்ததில் தெரியவந்தது.

"வளைந்த கத்தியினால் எதிரி என்னை வெட்டினர்" உடுவில் கொலை முயற்சி வழக்கில் சாட்சியம்

குரும்பசிட்டி, திங்கள்

"சம்பவம் நடைபெற்ற தினம் மாலை 2-30 மணியளவில் எனது வீட்டிலிருக்கையில் மேற்குத்திசை நோக்கி தமையனாரான சண்முகம் குளறிச் சத்தம் போடுவது எனக்குக் கேட்டது. சத்தம்கேட்டபக்கம் ஒழுங்கையால் ஓடிப்போய்ப் பார்த்தபோது சண்முகம் தனது வீட்டு வழவுக்குள் இரத்தக் காயங்களுடன் நிலத்தில் விழுந்து கிடப்பதைக் கண்டேன். அவ்விடத்தில் வேறு எவரையும் நான் காணவில்லை. நான் அந்நேரத்தில் அங்கு நின்றபடி குளறினேன். எதிரி பெருமாள் எனக்கு அண்மையில் வருவதைக்கண்டேன். எனது இடதுபக்க நெஞ்சில் எதிரி வளைந்த கத்தியினால் வெட்டினார். இதையடுத்து மயங்கியநிலையில் நான் விழுந்து விட்டேன். ஆஸ்பத்திரியில் வைத்துப் பொலிசாரிடம் வாக்குமூலம்கொடுத்தேன்" என மல்லாகம் நீதிபதி திரு. ரி. எஸ். நெத்தசிங்கா முன்னிலையில் உடுவில் கொலை முயற்சி வழக்கு விசாரிக்கப் பட்டபோது சாட்சியமளித்த ஆர். அருமைத்துரை (வயது 18) என்பவர் தெரிவித்தார்.

இவ்வழக்கில் உடுவில்வாசியான வேலன் பெருமாள் அதியிடத்தைச் சேர்ந்த இராமலிங்கம் அருமைத்துரையை இம்மருடம் மே மாதம் 3 ந்திகதி கத்தியால் வெட்டிக்கொலைசெய்ய எத்தனித்ததாகச் சுன்னாகம் பொலிசார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

காயமடைந்தவரைப் பரிசோதனைசெய்த யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியமும் சாட்சியமளித்தார். மேலதிகவிசாரணையை நீதிபதி அடுத்தமாதம் 11-ந் திகதிக்கு ஒத்திவைத்தார். எதிரிசார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகதாதன், புறக்டர் சிவசிறீதரனின் அநுசரணையுடன் ஆஜராஞர். வழக்காளி தரப்பில் திரு. ஆர். ஜே செல்வரத்தினம் ஏற்பட்டிருந்தார்.

ஒரு வாழையில் 3 குலைகள்

புதுக்குடியிருப்பு, திங்கள்

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சுதந்திரபுரம் என்னுமிடத்தில் இராசநாயகம் என்பவருடைய தோட்டத்தில் ஒருகதலி வாழை மூன்று குலைகளை சுன்றுள்ளது. இவ்வதிசயத்தை மக்கள்பார்வையிட்டுச் செல்கின்றனர்.

புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், திங்கள்

தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாயச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரியப் பட்டனர். தலைவர் திரு. இ. தம்பையா, காரியதரிசி திரு. இ. சண்முகநாதன், தனாதிகாரி திரு. பொ. ஆறுமுகம். 14போ கொண்ட நிருவாகக் குழுவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது.

மாடுகளுக்கு குறி போடவேண்டும்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மாடுகள் இலக்கமிடப்படாவிடில் அது குற்றமாகும். இவ்வாறு இலக்கமிடப்பட்ட மாடுகளின் தொகை 6,000 மட்டும்தான் யாழ். மாவட்டத்திலுள்ள மாடுகளின் தொகை மொத்தம் இரண்டரை லட்சமாகும்.

ஒவ்வொரு மாட்டுக்கும் யாழ். மாவட்டத்தைக் குறிக்கும் 'ஸி' என்னும் ஆங்கில எழுத்து அடையாளமும் கிராமசேவையாளரின் இலக்கமும் அத்துடன் மாட்டிற்கான இலக்கமும் இடப்படும். மாடுகளுக்கு இவ்வடையாளம் இடப்படுவதன் மூலம், மாட்டுக்களவைச் சுலபமாக தடுக்கலாமெனவும், யாழ். மாவட்டத்திலுள்ள 12 காரியாதிகாரி பிரிவுகளிலும் இதுவரை 6,000 மாடுகளே இவ்விதம் இலக்கமிடப்பட்டுள்ளதாகவும் இலக்கமிடுதலை அரசாங்கமே இலவசமாகச் செய்துவருவதாகவும் இலக்கமிடப்படாத மாட்டுச்சொந்தக்காரர் குற்றவாளிகளாகக் காணப்பட்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் யாழ் மாவட்ட கால்நடைக் காரியாலயக் காரியாதிகாரி திரு. ஏ. கந்தையா தெரிவித்துள்ளார்.

(நி)

ஒழுங்கை தேவநாயகம் மரணம்

ஒழுங்கை தேவநாயகம் மரணமடைந்தார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம் என்றும் தெரிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினம் பொருளாளர்: திரு.

கண்டி விளையாட்டு கழகம் வெற்றி

புன்னாலைக்கட்டுவன், திங். கண்டி யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் உரும்பராய் இந்துக்கல்லூரிப் பழைய மாணவர் கோஷ்டிக்குமிடையில் நேற்றுமாலை உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற விறுவிறுப்பான உதைபந்தாட்டப்போட்டியில் கண்டிக் கோஷ்டி 2—1 கோலால் வெற்றிபெற்றது.

பலாலி இராணுவப் படை கப்டன் திரு. ஜே, டயஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இப்போட்டியில், உரும்பராய்ச்கோஷ்டி முற்பகுதியில் தீவிரதாக்குதலை நடாத்தியதெனினும் சில கோல்போடும் சந்தர்ப்பங்களை இழக்கவேண்டி நேரிட்டது. இடைவேளைக்கு முன்னர் கண்டிக்கோஷ்டியைச் சேர்ந்த எம். செல்வரத்தினம் ஒரு கோல் போட்டார்.

இடைவேளை ஆரம்பமாகி ஒரு சில நிமிடங்களில் உரும்பராய்க் கோஷ்டியைச் சேர்ந்த எம். செல்வத்துரை ஒரு கோலைப் போட்டு சமமாக்கினர். எனினும் விளையாட்டு முடிவதற்கு 6 நிமிடங்களுக்கு முன் கண்டிக் கோஷ்டியைச் சேர்ந்த டபிள்யூ. சமரவீர ஒரு கோல் போட்டார். கண்டிக்கோஷ்டியின் பாசிங்விளையாட்டை அனைவரும் பாராட்டினர். திரு. எஸ். நவரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

எவருக்கும் வெற்றி இல்லை

புன்னாலைக்கட்டுவன். திங். உரும்பராய் இந்துக் கல்லூரிக் கோஷ்டிக்கும், ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் இருகோஷ்டிகளும் தலா இருகோல்கள் போட்டு வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்தன.

விளையாட்டின் முற்பகுதியில் மிகவும் உத்வேகத்துடன் ஆரம்பித்த ஸ்கந்தாக் கோஷ்டி பிற்பகுதியில் உற்சாகமிழந்து காணப்பட்டது. முற்பகுதியில் ஸ்கந்தா கோஷ்டியைச் சேர்ந்த அமரன் சந்திரசேகரமும் சிவநாதனும் ஒவ்வொரு கோல் போட்டனர்.

இடைவேளைக்குப் பின் உரும்பராய்க் கோஷ்டிமிகத் தீவிரமான தாக்குதலை ஆரம்பித்தது. இடைவேளை ஆரம்பத்தில் உரும்பராய்க் கோஷ்டியைச்சேர்ந்த தவபத்மசிங்கம் ஒரு கோல் போட்டார். இதன்பின் உரும்பராய்க்கோஷ்டி தீவிர தாக்குதலை நடாத்தியதெனினும், பல சந்தர்ப்பங்களை இழந்தது. விளையாட்டுமுடிவதற்கு ஒருசில விநாடிகள் இருக்கும்போது, உரும்பராய்க் கோஷ்டியைச் சேர்ந்த நித்தியானந்தன் ஒரு கோல் போட்டு, போட்டியைச்சமப்படுத்தினர். திரு. எஸ். நவரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

ஆசிரியர் கோஷ்டி வென்றது

காங்கேசன்துறை, திங்கள் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயஆசிரியர்கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களக் கோஷ்டிக்குமிடையில் வசாவிளான் மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வசாவிளான் ஆசிரியர் கோஷ்டி 2—1 கோலால் வெற்றியீட்டியது.

உரும்பராய் இந்து வெற்றி

புன்னாலைக்கட்டுவன், திங். உரும்பராய் இந்துக்கல்லூரி 2-ம் பிரிவுக் கோஷ்டிக்கும், உரும்பராய் பைங்கரன் கோஷடிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில இந்துக்கல்லூரிக்கோஷ்டி 3—0 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. ஆர். தினகராசா மத்தியஸ்தம் வகித்தார்.

மூன்றும் பிரிவுக்கோஷ்டிகளுக்கிடையே நடந்த போட்டியிலும் இந்துக்கல்லூரி 1—0 கோலால் வெற்றியீட்டியது. திரு, எஸ். இரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார்.

டயமண்ட் வெற்றி

உடுப்பிட்டி, திங்கள் வதிரி டயமண்ட் விளையாட்டுக்கழக 'பி' பிரிவுக் கோஷ்டியினருக்கும், இமையாணன் இளைஞர் உதைபந்தாட்டக் கோஷ்டியினருக்கும் இடையே நடைபெற்ற சிநேகிதபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் வதிரி டயமண்ட் கோஷ்டி 5-0 கோல்களால் இமையாணன் கோஷ்டியைத் தோற்கடித்தது.

இமையாணன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. ஆர் சிறீகாந்தன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

உதைபந்தாட்டம்

சங்கானை, திங்கள் வலிகாமம், மேற்கு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி (பிரிவு—1) சென். ஹென்றிஸ் விளையாட்டுத்திடலில் நடைபெற்றது. அ) பிரிவில் முள்ளானை விளையாட்டுக் கழகத்திற்கும் சென். அனீஸ் விளையாட்டுக்கழகத்திற்கு மிடையே போட்டி நடைபெற்றது. முள்ளானை 1—0 கோல்களால் வெற்றியீட்டியது. (ஆ) பிரிவுக்கிடையே நடைபெற்ற போட்டியில் றைஸிங்சன் விளையாட்டுக் கழகமும், மாதகல் யுனைட்டட் விளையாட்டுக்கழகமும் பங்குபற்றின. ஆரம்பம் முதல் இறுதிவரை நடைபெற்ற பலத்தபோட்டியில் ஒன்றையொன்று விட்டுக்கொடுக்காமல் ஆடியபோதிலும் மாதகல் 2—1 கோல்களால் வெற்றியீட்டியது. மத்தியஸ்தர்களாக முறையே ரி. நடராசா, எஸ். இமானுவல் ஆகியோர் கடமை ஆற்றினர்.

விவசாயப்போட்டி முடிவுகள்

புன்னாலைக்கட்டுவன், திங்கள் உரும்பராய் இந்துக்கல்லூரி மாணவர் வீட்டுத்தோட்டப் போட்டியில் ஊரெழுவைச்சேர்ந்த என். கணேசன் வை. லோகேஸ்வரன் என்போர் முதலிரு இடங்களையும், உரும்பராயைச் சேர்ந்த எஸ். ஜெயகுமார் மூன்றும் இடத்தையும் பெற்றனர்.

முதல் பரிசாக ரூபா 100 பெறுமதியான விவசாயக் கருவிகள் உரம் ஆகியனவும் இரண்டாம் பரிசாக ரூபா 50,ம் மீன்றுவது பரிசாக ரூபா 30ம் பெறுமதியான அதே பொருட்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இன்றைய மோதல்கள்

சங்கானை, திங்கள் வலிகாமம் மேற்கு விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுக்கொண்டிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை பழனியானந்தா விளையாட்டுக்கழகமும் சண்டிலிப்பாய் தெற்கு விளையாட்டுக்கழகமும் மோதிக்கொள்ளும். இதையடுத்து நாவலர் விளையாட்டுக்கழகத்துக்கும் சங்கானை விளையாட்டுக்கழகத்துக்குமிடையே மற்றொரு மோதல் நடைபெறவுள்ளது.

வானொலி நிகழ்ச்சிகள்

சென்னை - 1

செவ்வாய் 21 - 11 - 67

காலை 6-00 - வந்தேமாதரம், 6-05- துதிப்பாடல்கள் 6-30 நிகழ்ச்சிக்குறிப்புகள், 6-35 அருள்வாக்கு, 6-45 இசைஅமுதம், 7-15 தமிழில் செய்தி, 7-30 "ஐங்கரன்", 8-30 வாத்திய இசை, 8-45 கீதமஞ்சரி, 9-15 வீணை, 9-45 பாட்டு, 10-30 மதுரகீதம், 10-55 ஆங்கிலத்தில்செய்தி, 11-55 பிராந்தியச்செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 மாதர் நிகழ்ச்சி 1-30 வாத்திய கோஷ்டி, 1- 5திரைகானம், 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-30 வீணை. 6-05 பிராந்தியச்செய்திகள், 6-30 வாத்திய இசை.

இரவு 6-45 திரைகானம், 7-15 தமிழில் செய்திகள், 7-30 நம்விவசாயிகளுக்கு, 8-00 விஞ்ஞானவிமர்சனம், 8-15 ஜனதா நகர் — தொடர்நாடகம். 8-45 மெல்லிசை, 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 பாட்டு

திருச்சி - 1

காலை 6-30 வந்தேமாதரம், 6-40 ஆங்கிலத்தில் செய்தி, 6-45 நிகழ்ச்சிக்குறிப்பு, 6-50பக்திப்பாடல், 6-55 அறஉரை, 7-00 துதிப்பாடல்கள், 7-15 தமிழில் செய்தி, 7-30 துதிப்பாடல்கள், 8-00 ஆங்கிலத்தில் செய்தி, 8-15 திரைப்பட இசை, 11-55 பிராந்தியச் செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளருக்கு, 12 30 கல்வி ஒலிபரப்பு, 1-00 திரைப்பட இசை, 1-30 ஆங்கிலத்தில் செய்தி, 1-50 இசைமஞ்சரி, 2-00 தமிழில்செய்தி.

மாலை 5-00 இசைமாலை, 5-30 துதிப்பாடல்கள், 6-05 பிராந்தியச்செய்திகள், 6-15 இசைமஞ்சரி.

இரவு 6-30 ஊர்ச்சாவடி, 6-35 வாத்தியஇசை. 6-45 ஊர் ஆட்சி, 7-00 நாட்டுப்பாடல், 7-15 தமிழில் செய்தி, 7-30 விவசாயிகளுக்கான நிகழ்ச்சி, 8-00 சர்வகலாசாலைகளுக்கு, 8-30 டெல்லி அஞ்சல், 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 பாட்டு.

கலைவிழா

அளவெட்டி, திங்கள் காங்கேசன்துறை ஊறணி புனிதஅந்தோனியர் கிராம முன்னேற்ற, சனசமூக நிலைய வருடாந்த விழா இம்முறை பரந்த அடிப்படையில் கலைவிழாவாகக் கொண்டாடப்படுமெனவும் இவ்விழாவில் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகள் இடம்பெற விருப்பதாக அறியப்படுகிறது. அடுத்தமாதம் இவ்விழா நடைபெறுமாம்.

"2-ம் எதிரி தூணுடன் கட்டப்பட்டிருந்தார்"

பெண் கொலை முயற்சி வழக்கில் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

குரும்பசிட்டி, திங்கள் மூளாய் கொலை முயற்சி வழக்கு விசாரணை மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு. வி. ரி. மெண்டிஸ் சாட்சியமளித்தார். இவ்வருடம் பெப்ரவரி மாதம் 13-ம் திகதி மூளாயைச் சேர்ந்த கிட்டினன் சிவபாக்கியம் என்ற பெண்ணைக் கொலை செய்யச் சதி செய்ததாகவும், கழுத்தில் வெட்டிக் காயம்விளைவித்து கொலை செய்ய எத்தனித்ததாகவும் இவரது கணவரான வேலன் கிட்டினன் மீதும், இதற்கு உடந்தையாக இருந்ததாக நாகமுத்து கந்தசாமி என்பவர்மீதும் சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி இவ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மெண்டிஸ் தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

சம்பவதினம் தகவல் கிடைத்ததையடுத்து வீட்டிலிருந்த நான் பொலிஸ் நிலையம் சென்றேன். அங்கே இறந்தவரான 1-ம் எதிரி நிற்பதைக்கண்டேன். காயமடைந்த பெண் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டதாக அறிந்தேன். 1-ம் எதிரியை அழைத்துக்கொண்டு சம்வம் இடம்பெற்ற அவரது வீட்டுக்குச்சென்றபோது விறுந்தையில் 2-ம் எதிரி தூண் ஒன்றில் இணைத்துக் கட்டப்பட்டும், சுமார் 100 பேர் வரையிலான சனக்கூட்டம் குழுமியிருப்பதையும்கண்டேன். விறுந்தையின் வலதுபுற அறைக்குள்ளே இரத்தக்கறை படிந்த பாய், தலையணை இருக்கக்காணப்பட்டது. பரிசோதனையின் மூலம் 2-ம் எதிரியின் சேட் பொக்கெட்டில் ஒரு தியேட்டரின் கலரி வகுப்பு டிக்கட் ஒன்றும் இருவருக்கு வழங்கப்பட்டுள்ள பஸ்பிரயாணச் சீட்டுக்களும் கிடைக்கப்பெற்றன. 2-ம் எதிரியின் உதட்டின் கீழ்ப்புறத்தில் காயமிருந்தது. 1-ம் எதிரியிடமிருந்தும் 2-ம் எதிரி வைத்திருந்த மாதிரியான சினிமா டிக்கெட் ஒன்றைப் பெற்றுக்கொண்டேன். இரு எதிரிகளிடமும் வாக்குமூலம் எடுத்தேன். 1-ம் எதிரியின் முன்புறவளவில் காயம் விளைவிக்கப் பாவித்த கத்தியை எறிந்துவிட்டதாக 2-ம் எதிரி என்னிடம் கூறினர். சம்பவதினம் காயமடைந்தவர் நித்திரை செய்த அறையின் திறப்பைத்தனது வீட்டுக் கூரையில் மறைவாக வைத்திருப்பதாக 1-ம் எதிரி என்னிடம் வாக்குமூலம்கொடுத்தார். குறிப்பிட்ட இரு இடங்களிலுமிருந்து கத்தி திறப்புஆகியவற்றைக்கண்டு எடுத்தேன்.''

மாஜிஸ்திரேட் மேல்விசாரணையை இம்மாதம் 31ந் திகதிக்குப் பின்போட்டார். எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. சிவ சிறீதரன் ஆஜராகியிருந்தார்.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட 1-ம் எதிரி வேலன் கிட்டினன் யாழ். பஸ் நிலையத்தில் வைத்துக் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

கொழும்பில் மாநாடு

கொழும்பு, திங்கள் யூனெஸ்கோவின் ஆதரவிலான ஒரு நூல்நிலைய அபிவிருத்தி மாநாடு கொழும்பில் அடுத்த ஆண்டில்நடைபெறும். பல நாட்டுப் பிரதிநிதிகள், இம்மாநாட்டில் பங்குபற்றுவர்.

அடுத்த வருட போயா தினங்கள்

கொழும்பு, திங்கள் 1968-ம் ஆண்டில் 49 போயாதினங்கள் வருகின்றன. வண கலுகொண்டயாவஶ்ரீ பன்னசேகரதேரோ தலைமையில், உள்நாட்டமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு, இப்போயா தினங்களைத் தெரிவு செய்து தயாரித்துள்ளது. இதன்படி 49 விடுமுறைத் தினங்களே ஏற்படும். இதனால் மூன்று மேலதிக முழுநாள் ஒய்வு தினங்களையும் மூன்று மேலதிக அரைநாள் ஒய்வு தினங்களையும் அரசாங்கம் பிரகடனப்படுத்தும்.

1968-ம்வருடத்தில் வரும் போயாதினங்கள் வருமாறு:

ஜனவரி:
ஞாயிறு 7, ஞாயிறு 14, திங்கள் 22, ஞாயிறு 28.

பெப்ரவரி:
செவ்வாய் 6, செவ்வாய் 13, செவ்வாய் 20, செவ்வாய் 27.

மார்ச்:
புதன் 6, புதன் 13, வியாழன் 21, புதன் 27.

ஏப்ரல்:
வெள்ளி 5, வெள்ளி 12, வெள்ளி 19, வெள்ளி 26.

மே:
ஞாயிறு 5, சனி 11, சனி 17, ஞாயிறு 26.

ஜூன்:
திங்கள் 3, திங்கள் 10, திங்கள் 17, திங்கள் 24.

ஜூலை:
புதன் 3, செவ்வாய் 9, செவ்வாய் 16, புதன் 24.

ஆகஸ்ட்:
வியாழன் 1, புதன் 7, வியாழன் 15, வெள்ளி 23. வெள்ளி 30.

செப்டம்பர்:
வெள்ளி 6, சனி 14, சனி 21, சனி 28.

ஒக்டோபர்-
சனி 5, திங்கள் 14, திங்கள் 21, திங்கள் 28.

நவம்பர்-
திங்கள் 4, செவ்வாய் 12, செவ்வாய் 19, செவ்வாய் 26.

டிசம்பர்:
செவ்வாய் 3, வியாழன் 12, புதன் 18, வியாழன் 26.

இந்தியர் கொலையுண்ட ஹனேய் சம்பவம்

அமெரிக்கா வருத்தம்

புதுடில்லி, நவ 20 அமெரிக்க விமானத்தாக்குதலின் விளைவாக ஹனோயின் சர்வதேசக்கட்டுப்பாடு கமிஷனின் அலுவலகத்தைச் சேர்ந்த இந்தியர் ஒருவர் கொல்லப்பட்டது குறித்து அமெரிக்கஅரசாங்கம் வருத்தம் தெரிவித்துள்ளது. இதை இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ளது.

இதற்கு நஷ்டஈடு கோரும் பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறதா என்று கேட்டதற்கு "இன்னும் கோரவில்லை. ஆனால் அதைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம்', என்று இந்திய அதிகாரி ஒருவர்பதிலளித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண நகர சோலைவரி உயர்த்தப்படலாம்

மார்க்கட் கட்ட கமிஷனர் குழு ஆலோசனை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண நகரசபை எல்லைக்குள் சோலைவரி உயர்த்தப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

இன்று கூடும் யாழ். நகரசபை விசேஷ ஆணையாளர் குழு இதுசம்பந்தமாக விரிவாக ஆலோசனை நடத்தவிருப்பதாகத் தெரிகிறது.

உத்தேச சோலைவரி உயர்வின் பிரகாரம் இப்போது 12 1/2 சத வீதமாக வசூலிக்கப்படும் வரி 15 சத வீதமாகவும் 14 1/2 சத வீத வரி (2 சத வீத தண்ணீர் விநியோக வரியுடன்) 20 சத வீதமாகவும் உயர்த்தப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாண நகரின் அபிவிருத்தித் தேவைகளுக்கு புதிய வரிமூலம் வசூலிக்கப்படும் பணம் உதவமுடியும் என கமிஷனர் குழு நம்புவதாகத் தெரிகிறது.

இன்று கமிஷனர்கள் கமிட்டியால் பரிசீலனைசெய்யப்படவிருக்கும் 53 முக்கிய விஷயங்களில் யாழ்ப்பாண மார்க்கட் கட்டுவது பற்றியும் ஆலோசிக்கப்படவிருப்பதாகவும் யாழ். நகரசபைக்கு கிடைக்கும் புதிய வருமானம் மூலமே உத்தேசிக்கப்பட்ட 35 லட்சம் ரூபா செலவிலான மார்க்கட்டைகட்டி முடிக்க நிட்டம் வகுக்கப்படவிருப்பதாகவும் நம்பப்படுகிறது.

இன்று கூடும் யாழ். நகரசபை விசேஷ ஆணையாளர் கமிட்டியில் திரு. டபிள்யு. பத்மநாதன், திரு. எஸ். மாணிக்கவாசகர், திரு. என். நடேசன், திரு. ஹட்சன் செல்வராஜா ஆகியோர் அங்கம்வகிக்கிறார்கள்.

கலவரத்தில்கைதானவர்கள் பிணையில் சென்றனர்

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரிக்கு அடுத்துள்ள தனங்கிழப்பு என்ற கிராமத்தில் இரு கோஷ்டியினரிடையே ஏற்பட்ட கலவரத்தில் நால்வர் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கலவரம் நடந்த பகுதிக்கு சாவகச்சேரிப் பொலிஸார் உடனடியாக விரைந்து சென்று இரு கோஷ்டியினரையும் சேர்ந்தகுமார் 10 பேரை கைது செய்தனர். மீண்டும் கலவரம் ஏற்படாமல், அப்பகுதியைப் பொலிஸார் ரோந்து சுற்றி வருகின்றனர்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே.விக்னராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். தம்பன் வேலன், சடையன் கிட்டினன், சின்னப் பொடியன் நாகன், மாணிக்கன் மகாலிங்கம், வல்லிசெல்லத்துரை, கணபதி மார்க்கண்டு, சடையன் பொன்னையா, சடையன் செல்லன், கணபதி கிட்டினன், சடையன் கதிரன், சின்னப்பு கந்தையா, கதிரவேலு மணியம், சதாசிவம் மணியம், சின்னப்பு இராசையா ஆகிய 14 பேர்களையும் தலா 300 ரூபா பிணையில் செல்ல மாஜிஸ்திரேட் அனுமதித்தார்.

இம்மாதம் 27ந்திகதிமீண்டும் கோர்ட்டில் ஆஜராகும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். அன்றைய தினம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுமென அறியப்படுகிறது.

இந்தியாவின் முதல் ராக்கெட் சோதனை

புதுடில்லி, நவ. 19

இந்தியா தனது முதலாவது ராக்கெட்டை இன்று வெடித்து பரீட்சித்தது.

திருவனந்தபுரத்துக்கருகில் உள்ள தும்பா ராக்கட் நிலையத்தில் இந்த ராக்கட் சோதனை வெற்றிகரமாக நடைபெற்றது. நாளைய தினம் மேலும் இரு ராக்கேட்டுகள் சோதிக்கப்படவிருக்கின்றன.

மானுக்கு வைத்த குறி

சகோதரன் உயிரைப் பறித்தது

இரக்குவானை, ஞாயிறு

அம்பலாவைச் சேர்ந்த டபிள்யு. எம். பபிலிஸ் தனது இளைய சகோதரன் பபாசிங்கோவுடனும், இன்னொரு கிராமவாசியுடனும் வேட்டையாடச் சென்றார்.

அடர்த்தியான காட்டிற்குள் மூவரும் சென்றனர். பபிலிஸ் தனது சகோதரனையும், மற்றவரையும் வேறு பகுதிக்குச் செல்லும்படி கூறினார்.

மான் ஒன்றுக்குகுறிவைத்து பபிலிஸ் சுட்டார். மானும் விழுந்தது. அதிலுடன் அவர் சகோதரர் பபாசிங்கோவும் விழுந்துமாண்டார். மானுக்குப் பின்னால் சகோதரன் நின்ற விஷயம்பின்னர்தான் பபிலிஸுக்குத் தெரியும். மானுக்குச் சுட்டகுண்டுகள் அவரிவன் சகோதரனின் முகத்தைப் பதம்பார்த்திருந்தது. இரத்த வெள்ளத்தில் அவர் சகோதரர் மாண்டுகிடந்ததுகண்டு கதறியழுதார்.

பலேபேடாபொலிஸ் நிலையத்தில் பபிலிஸ்மேற்கண்ட சம்பவங்களை விபரித்தார். பொலிஸாரின் புலன் விசாரணை தொடர்கிறது.

இ. தொ. கா மகாநாடு இவ்வருடம் நுவரெலியாவில்

கொழும்பு, ஞாயிறு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்வருடாந்தமகா நாடு இம்முறை நுவரெலியாவில் நடைபெறவிருக்கிறது.

இம்மகாநாட்டுக்கு வெளி நாடுகளிலிருந்தும் குறிப்பாக சர்வதேச சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்திலிருந்தும் பல தொழிற்சங்க பிரமுகர்கள் வரவிருப்பதாக இ. தொ. காங்கிரஸ் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை "சமதாடு" விமிட்டெட் சிதாபனத்தாரால் வாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவிதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

'அரசாங்கத்துக்கு ஆதரவளிப்போம் ஆனால், ...'

சுதந்திரக்கட்சி எம்.பி. கூறுகிறார்

காலி, ஞாயிறு

"தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ், டாக்டர் தஹநாயக்கா, திரு. பிலிப் குணவர்த்தனா, சி. பி. டி. சிவராஜரத்தினா ஆகியோருடன் பிரதமர் தொடர்பை அறுத்துக்கொண்டால், தேசிய அரசாங்கத்துக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த பல பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் ஆதரவளிப்பர்" என்று பெந்தர எல்பிட்டிய எம். பி. திரு. அல்பேர்ட் காரியவாசம் (சுதந்திரக்கட்சி) நமது நிருபரிடம் கூறினார்.

திரு. காரியவாசம் கட்சி மாறவிருப்பதாக அடிபட்ட வதந்தியொன்றைப் பற்றி நமது நிருபர் அவரிடம் கேட்டபோதே அவர் இப்படியாகப் பதில் சொன்னார்.

"தமிழர்கள் முதலில் விலகவேண்டும். பின்னர் மந்திரிகள் விலகிக்கொள்ள வேண்டும். அப்படி நடந்தால் சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் பலர் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பர்" என்றார் காரியவாசம்.

பிரபல எழுத்தாளர் மறைவு

யாழ்ப்பாணம், செவ்.

பிரபல ஈழத்து தமிழ் சிறுகதை எழுத்தாளர் தாழையடி சபாரத்தினம் நேற்றுமுன்தினம்கொழும்பில் மாரடைப்பினால்காலமானார் இவரது சடலம் உடுப்பிட்டிக்கு நேற்று கொண்டு வரப்பட்டது.

'கல்கி' நடாத்திய ஈழத்து சிறுகதை போட்டியில் பரிசுபெற்ற இவர் ஈழத்து தமிழக சஞ்சிகைகளில் எல்லாம் தொடர்ந்து எழுதிவந்துள்ளார். இவர் சிறந்த வானொலி நாடக எழுத்தாளர். இவரது பல நாடகங்கள் கொழும்பு வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன. இவர் 'சதந்திரன்', 'வீரகேசரி' 'புதினம்' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றியிருக்கிறார்.

நேற்று முற்பகல் அன்னாரது ஈமக்கிரியைகள் உடுப்பிட்டியில் நடைபெற்றன. பிரமுகர்கள், எழுத்தாளர்கள் மற்றும் லபரும் பெருமளவில் கலந்துகொண்டனர்.

ஒருவாரமாக பஸ் ஓடவில்லை

நயினாதீவு, திங்கள்

கடந்த ஒரு வாரகாலமாக நயினாதீவில் போக்குவரத்தில்ஈடுபட்டிருந்த பஸ் பழுதடைந்துள்ளதால் இங்குள்ள மக்கள் போக்குவரத்துசெய்வதில் மிகக் கஷ்டமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

மீண்டும் தொடர்பு

பிரிட்டன், நவ. 19

எகிப்துக்கும் — பிரிட்டனுக்குமிடையில் மீண்டும் ராஜீயத்தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ள இரு நாடுகளும் சம்மதித்துள்ளன.

பொதுச்சந்தையில் பிரிட்டன் சேரும்?

லண்டன், நவ. 19

பிரிட்டன் நாணயமதிப்பைக் குறைத்திருப்பதால் ஐரோப்பிய பொதுச்சந்தையில் அதனையும் சேர்த்துக் கொள்வதுபற்றி புனராலோசனைசெய்யலாமென்று பிரஸ்ஸெல்ஸில் கூடிய ஐரோப்பிய பொருளாதார சமூகம் வலியுறுத்தியுள்ளது.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் வாளும்குலிலாயும்

பொது மக்கள் பார்வைக்கு புதுடில்லியில் வைக்கப்படும்

புதுடில்லி, நவ. 20

இரண்டாவது உலக யுத்தத்தின்போது, பர்மாபோர் முனையில் இந்திய தேசிய இராணுவத்தின் பிரதம சேனாதிபதியாக இருந்து போர் நிகழ்த்தியபோது, நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் உபயோகித்த வாளும், அணிந்திருந்த குல்லாயும், பூட்சுகளும் டிசம்பர் 10ம் திகதி கல்கத்தாவிலிருந்து புதுடில்லிக்குக் கொண்டுவரப்படும். பின்னர்இவை ஊர்வலமாகச் செங்கோட்டைக்கு எடுத்துச் செல்லப்படும் அவை அங்கு பொது ஜனங்களின் பார்வைக்காக வைக்கப்படும்.

இந்தப் பொருட்களைச் சென்ற வருடம் கல்கத்தாவிலுள்ள நேதாஜி மியூஸியத்திற்கு ஜப்பானிய அரசாங்கம் அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

சில பொருட்களின் வெளி நாட்டு இறக்குமதிக்குதடை?

செலாவணியை குறைக்க அரசாங்கத்தின் நடவடிக்கை

கொம்பனித்தெரு, திங்கள்

வெளிநாட்டுச் செலாவணியைக் குறைக்க, வரவு செலவைச் சமாளிக்க சில பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவது தடை செய்யப்படவிருக்கிறது. அவற்றில் நித்தப்பாவனைப் பொருட்களான வெங்காயமும் ஒன்றாகும். மற்றப் பொருட்களில் ஒரு சில பகுதிப் பொருட்களும் இறக்குமதி குறைக்கப்படவிருக்கிறது. இலங்கையின் பொருளாதார நிலையைப் பரிசீலனை செய்த உலகவங்கி நிபுணர்குழு அரசாங்கத்திற்குச் சிபார்சுசெய்துஇருக்கின்றது.

வெங்காய இறக்குமதியைத் தடை செய்வதினால் வருடம் ஒன்றுக்கு இரண்டரைக்கோடி ரூபா வெளிநாட்டுச் செலாவணி மிச்சப்படுத்தப்படும் என்றும், இலங்கையில் செய்கை பண்ணப்படும் வெங்காயம் அறுபது சதத்திற்குமேல் அதிகரிக்குமானால் இலங்கையில் வெங்காயத்திற்குத் தட்டுப்பாடு இன்றிச் சமாளிக்க முடியும் என்றும் மேற்படி நிபுணர் கூறினார்.

செத்தல்மிளகாய், வெங்காயத்தின் உத்தரவாத விலையை அரசாங்கம் உயர்த்தும். அல்லது உருளைக்கிழங்கிற்கு உள்ளதுபோல் உத்தரவாத விலைமுற்றுக நீக்கப்படும் எனவும் அறியப்படுகிறது.

கலவர வழக்கில் இரு எதிரிகளும் விடுதலை

சாவகச்சேரி, செவ்.

கொடிகாமம் கலவரம் சம்பந்தப்பட்ட வழக்கில் எதிரிகள் இருவரும் விடுதலைசெய்யப்பட்டனர். இவ்வழக்கு நேற்றுக் காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூன் மாதம் 23-ம் திகதி கொடிகாமத்தில், சின்னத்தம்பி என்பவரைத் தாக்கி படுகாயப்படுத்தியதாக ஆசைப்பிள்ளை, தம்பிப்பிள்ளை, கணபதி சின்னத்தம்பி ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் எஸ். என். இராசதுரை, புறக்டர் கே. ஞானச்சந்திரனின் அனுசரணையுடன் ஆஜராகினர். வழக்காளி தரப்பில அட்வகேட் ஆலால சுந்தரம், புறக்டர் ஏ. அன்ரனியின் அனுசரணையுடன் ஆஜராகினர்.

சின்னத்தம்பி சாட்சிய மளிக்கையில் கூறியதாவது: சம்பவம் நடந்ததினம் கொடிகாமம் சந்தைக்குப் போய் மரக்கறி வாங்கினேன். அப்பொழுது 2-ம் எதிரி வந்து எனது சேட்டில் பிடித்து அடிக்க முயற்சித்தார். உடனே அங்கு நின்ற பொலிஸாரிடம் கூறினேன். அன்று 3 மணிக்கு சந்தையிலிருந்து வீட்டிற்குச் சென்ற போது எதிரிகள் இருவரும் வேறு 6 பேரும், எதிர்திசையால் வந்தனர். நான் ஓடிச்சென்று தில்லைநடேசன் வீட்டுக்குள் சென்றேன்.

ஒருவர் என்னைப்பிடித்து வெளியில் இழுத்துவந்தார். 2-ம்எதிரி கொட்டனால் பின் கழுத்தில் அடித்தார். நான் குனிந்தபோது 1-ம் எதிரி காலால் என் வாயில் அடித்தார். அதன் பின் ஒரு பல்லை காணவில்லை. இரத்தம்பாய்ந்தது. இரண்டு பல்லு மேல் நோக்கி இருந்தது. அடியின் பின் நான்மயங்கிவிட்டேன். 2-ம் எதிரி மீண்டும் காலில் அடித்தார். பின்னர் நான் பொலிசுக்குச் சென்றேன். சாட்சிகள் இல்லையென்று பொலிசிடம் கூறினேன்.

விசாரணையின்பின் மாஜிஸ்திரேட் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

பிறந்தநாள் கொண்டாடினர்

புதுடில்லி, நவ. 19

பாரதப் பிரதமர் திருமதி இந்திராவின் 50-வதுபிறந்த தினத்தையொட்டி உலகின் பல நாடுகளிலுள்ள தலைவர்கள் அவருக்கு இன்று வாழ்த்துச்செய்திகளைஅனுப்பினர், ஜனாதிபதி டாக்டர் சாகிர் ஹூசெயின், உப ஜனாதிபதி திரு. வி. வி. கிரி, காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. காமராஜர் ஆகியோர் நேரில் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

மகா வித்யாலயம் தரம் உயர்ந்தது

காங்கேசந்துறை, ஞாயிறு

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் அடுத்த மாதத்திலிருந்து தரம் உயர்த்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) வகுப்புவரை மட்டும் இருந்துவந்த இவ்வித்தியாலயத்தில் ஜனவரிமுதல் ஜி. ஸி. ஈ. உயர்தரமும் இருக்கும்.

காங்கேசந்துறைத் தொகுதியில் இதுஒன்றே மகாவித்தியாலயம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org